MISSOURI TAMIL SCHOOL
மிசௌரி தமிழ்ப்பள்ளி

Non-Profit organization
Registered in state of Missouri

AdvancED ACCREDITED

# அரும்பு

சித்திரை, திருவள்ளுவராண்டு 2050 April 2019, இதழ் 10



Arumbu Magazine from Tamil School of Missouri



தெக்கணமும் அதிற்சிறந்த திராவிட நல் திருநாடும்
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே!
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்தபெருந் தமிழணங்கே! தமிழணங்கே!
நின் சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து வாழ்த்துதுமே!
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

- மனோன்மணீயம் பெ.சுந்தரனார்

# ஆசிரியர் உரை



ஆண்டுக்கு ஒருமுறை சித்திரையில் மலரும் அரும்பு இதழ், இம்முறையும் அழகு தமிழில், சுவையான கட்டுரைகளையும், செய்திகளையும் சுமந்து வருகிறது.

இதழ் ஆசிரியராக பணியாற்றியதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். இந்த இதழுக்காக தங்கள் படைப்புகளை உற்சாகத்துடன், உரித்த காலத்திற்குள் அனுப்புமாறு குழந்தைகளை ஊக்குவித்த பெற்றோர்களுக்கும், தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள்.

இயற்கையின் ரசிகர்களாக மாறி எழிலோவியம் தீட்டி, இவ்விதழை வண்ணமயமாக்கிய பெருமை, நம் மழலையர் முதல் மூன்றாம் நிலை மாணவர்களையே சாரும்.

அடுத்து, ‘குழந்தைகள் வருங்காலத்தின் சிற்பிகள்’ என்பதற்கேற்ப, நிலை 4 மாணவர்கள், தம் கனவு உலகத்தை நம் மனக்கண் முன் கொண்டு வந்து, வியக்கும் வகையில் நயம்பட விவரித்துள்ளார்கள். அவர்களுடைய கற்பனை வளத்திற்கு வானமே எல்லை அல்லவா?

நம் முதுநிலை மாணவர்களும், காலத்தால் அழியாத குறட்பாக்களுள் தம்மைக் கவர்ந்த குறளைத் தேர்ந்தெடுத்து, வாழ்க்கைக்கு பயனுள்ள கருத்துக்களைப் பகிர்ந்துள்ளார்கள். பல நூற்றாண்டுகளைக் கடந்து இன்றும் நடைமுறை வாழ்கைக்குப் பொருந்தும் வகையிலான நீதியுரைத்த வள்ளுவனால், வான்புகழ் கொண்டாள் தமிழன்னை என்பது முற்றிலும் உண்மை! கடல் கடந்து வாழும் போதும், தாய்மொழியாம் தமிழில் சிந்திப்பதில் நம் இளம் சந்ததியினர் தேர்ந்து வருவது நம் தமிழ்ப்பள்ளிக்கு பெருமை சேர்க்கும் செய்தியாகும்.

அட்டையில் உள்ள செங்காந்தள் மலர், நம் தமிழ்நாட்டின் மாநில மலராகப் போற்றப்படுகிறது. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு உள்ளிட்ட சங்க இலக்கியங்களிலும் இம்மலரைப் பற்றிய குறிப்புகள் உள்ளன. உன்னிப்பாகப் பார்த்தால், இதன் இதழ்கள் அழகிய விரல்களைப் போலவும், சுடர்கள் போலவும் காட்சியளிக்கும். மருத்துவ குணங்கள் நிறைந்த இம்மலர், வாடினாலும் உதிராமல் இருக்கும் (விகடன்.காம்). செங்காந்தளின் இதழ்களை போல் நம் மாணவர்களும் இயல், இசை, நாடகம், ஓவியம், நாட்டியம், கட்டுரை வரைதல் என்று அனைத்திலும் முத்திரை பதித்து வருவதற்கு நம் அரும்பு ஒரு சான்றாக அமையும்.

பல சுவையார்வமிக்கப் பகுதிகளைச் சுமந்து வரும் இந்த அரும்பு இதழை வடிவமைத்து, வெற்றிகரமாக வெளியிட எனக்கு உறுதுணையாக நின்ற தமிழ்ப்பள்ளி நிர்வாகிகளுக்கு இந்நேரத்தில் நன்றி கூற கடமைப்பட்டிருக்கிறேன். குறிப்பாக, கட்டுரைகளின் பிழைத்திருத்தத்தில் பேருதவி புரிந்த திரு. இளங்கோவன் தங்கவேலு அவர்களுக்கு மிக்க நன்றி. ஒவ்வொரு ஆண்டும் அரும்பு மலரை வடிவமைக்க ஆர்வத்துடன் உதவும் திரு. சு.சுடலை அவர்களுக்கு நன்றிகள் பல!

வாழ்க தமிழ்... வளர்க தமிழ்ப்பள்ளி..

**இரம்யா ஜானகிராம்**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| பள்ளி நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள் | 05 |
| புதியதோர் உலகம் செய்வேன்! | 11 |
| சித்திரம் பேசுதடி -மழலை, நிலை 1 மாணவர்கள் | 14 |
| விடுகதை | 19 |
| திருக்குறள் உணர்த்தும் பாடம் | 20 |
| என்றும் அழியா பழமொழிகள் | 23 |
| ஃபெட்னா 2018 | 24 |
| இயற்கை செயற்கை | 26 |
| குறுக்கெழுத்து போட்டி | 27 |
| சித்திரம் பேசுதடி -நிலை 2, 3 மாணவர்கள் | 28 |
| குறுக்கெழுத்து போட்டி - விடைகள் | 31 |
| என் பயண அனுபவம் | 32 |
| டாக்டர் மு.வ. அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையின் சிறு பகுதி | 34 |
| விழித்திடு தமிழகமே! | 35 |
| தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுடன் ஒரு நேர்முகம் | 36 |
| மிசௌரி தமிழ்ப்பள்ளி தன்னார்வலர்கள் குழு | 38 |



முனைவர். ஜோதிலிங்கம் சிவபாக்கியம்

# பள்ளி நிகழ்வுகள் மற்றும் செயல்பாடுகள்

அனைவருக்கும் வணக்கம்.

மிசௌரி தமிழ்ப் பள்ளியின் வசந்த கால அரும்பின் மூலமாக உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி. நம் பள்ளி இரண்டு தலைமுறை ஆண்டுகளை கடந்து வந்திருந்தாலும், நமது இளம் மாணவர்களைப் போலவே, பள்ளியும் இரண்டு கிளைகளிலும் தன்னார்வலர்களின் உழைப்பால் இளமையுடன் இயங்கிக் கொண்டிருக்கிறது. ஆண்டுகள் தோறும் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே செல்கிறது. தாய்மொழியைக் கற்பதற்காக நூறு மைல் தூரத்தைக் கடந்துவரும் மாணவர்களும், நமது பள்ளிக்கு உண்டு என்பதில் மிக்க மகிழ்ச்சி.

"எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்ற சொல்லிற்கிணங்க ஆசிரியர்களின் அறிமுகத்தோடு இந்தக் கல்வியாண்டு இனிதே ஆரம்பமாகியது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஆசிரியர்களின் ஆலோசனைக் கூட்டத்திற்கு பிறகு இந்த ஆண்டு மழலை, நிலை 1 மற்றும் நிலை 2, பாடத்திட்டத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன. மாணவர்களுக்கு தமிழ் எழுத்துக்கள், எண்கள் மற்றும் குறியீடுகளுடன் கூடிய அட்டவணையும் பாடப்புத்தகத்துடன் கொடுக்கப்பட்டுள்ளது.

மாணவர்களின் தர மதிப்பீடு: நமது பள்ளியில் மாணவர்களின் கற்கும் திறனை மதிப்பீடு செய்வதற்கு, பருவத் தேர்வுகளைத் தவிர, தமிழ் மொழி பேச்சுத் திறன்,







கேட்புத் திறன், படிப்புத் திறன் மற்றும் எழுத்துத் திறன் போன்ற நான்கு முக்கிய திறன்களை மதிப்பீடு செய்வதற்காக *“Speak-Understand-Read-Write Evaluation Process (SURWEP)”* என்னும் வழிமுறையை நமது பள்ளி ஆசிரியர்கள், அமெரிக்கத் தமிழ்க் கல்விக் கழகத்தின் (அ.த.க) உதவியுடன் தயாரித்துள்ளார்கள். இந்த முறையை பயன்படுத்தி மாணவர்களின் மொழித் திறன்களை பரிசோதனை செய்து, ஒவ்வொரு மாணவருக்கும் தனிப்பட்ட வளர்ச்சிக்குத் தேவையான பயிற்சி வழங்கப்படுகிறது. மாணவர்கள் தம் தாய் மொழியான தமிழை ஆர்வத்துடன் கற்பதில் நல்ல முன்னேற்றம் காணப்படுகிறது.

தர மதிப்பீட்டு விகிதம்: நமது பள்ளியில் மாணவர்களின் வருகைப் பதிவு, வீட்டுப்பாடம், மற்றும் பருவத்தேர்வுகள் ஆகியவற்றின் சராசரி மதிப்பெண்களை நிலை மற்றும் பள்ளி அளவிலும், முதலாம் மற்றும் இரண்டாம் பருவத்தையும் ஒப்பிட்டுப் பார்க்கப்படுகிறது. மாணவர்களின் கல்வி கற்கும் திறனை, நிலை ஆசிரியர்களும் மற்றும் பள்ளி நிர்வாகக் குழுவும், ஆராய்ந்து, மாணவர்களின் தமிழ் மொழிக் கல்வி வளர்ச்சிக்குத் தேவையான முறைகள் மற்றும் மாற்றங்களை அறிமுகம் செய்கிறது.










LEARNING TARGETS











| காரணிகள் | விழுக்காடு |
|---|---|
| பருவத்தேர்வுகள் | 40 |
| மாணவர் வருகை | 21 |
| வீட்டுப்பாடம் | 21 |
| திட்டம்(Project) | 10 |
| சர்வெப் (SURWEP) | 8 |

பள்ளியில் அனைத்து நிலைகளுக்கும், பாடப் புத்தகம் மற்றும் பயிற்சிப் புத்தகத்தில் ஒவ்வொரு ஆண்டும் தொடர்ந்து முன்னேற்றங்களை ஏற்படுத்தும் நோக்கத்தில், தேவையான திருத்தங்கள் மற்றும் ஒரு சில மாற்றங்களை செய்வதற்காக, நமது பள்ளிச் சார்பில் அ.த.க. கூட்டத்தில் பங்கேற்று தெரியப்படுத்தி வருகிறோம். அதற்கானப் பணியிலும் நமது பள்ளி தன்னார்வலர்கள், அ.த.க உடன் இணைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

தமிழ்த்தேனீ போட்டி: சென்ற ஆண்டு டாலசில் *(Dalllas, TX)* வட அமெரிக்க தமிழ்ச் சங்கப் பேரவை நடத்திய தேசிய தமிழ்த் தேனீ போட்டியிலும், குறள் தேனீ போட்டியிலும் நம் பள்ளி மாணவர்கள் பங்கேற்று பரிசுகளையும் சான்றிதழ்களையும் பெற்றனர். இந்த ஆண்டும் சிகாகோவில் *(Chicago, IL)* நடைபெற உள்ள தேசியத் தமிழ்த் தேனீ போட்டியில் பங்கேற்க நம் மாணவர்கள் தயாராகி வருகின்றனர் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறோம். ஆண்டுகள் தோறும் நமது பள்ளியில், மாணவர்களுக்காக "தமிழ்த் தேனீ" போட்டி நடத்தப்பட்டு, வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பதக்கங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுகிறது. இந்த இதழ் உங்கள் கரங்களில் தவழும் நேரத்தில், இந்த ஆண்டும் தமிழ்த் தேனீ போட்டிகள் மிக சிறப்பாக நடைபெற்று முடிந்திருக்கும். போட்டியில் வெற்றி பெற்ற மற்றும் பங்கேற்ற மாணவர்களுக்கு தமிழ்ப் பள்ளியின் வாழ்த்துக்களும் நன்றிகளும்.









கலைத்திறன்: ஆண்டுதோறும் மிசௌரி தமிழ்ச்சங்கம் நடத்தும் நிகழ்ச்சிகளில் நமது பள்ளி மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் பல்வேறு கலைநிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு தங்களின் கலைத்திறனையும் நிரூபித்துக் கொண்டிருக்கிறார்கள். கடந்த தை மாதம் நடை பெற்ற மிசௌரி தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழா கொண்டாட்டத்தின் போது, நமது பள்ளி ஆசிரியர்கள், தன்னார்வலர்கள் மற்றும் மாணவர்கள் அனைவரும் "இலக்கிய வினாடி வினா" மற்றும் "பட்டிமன்றம்" நிகழ்ச்சிகளில் பங்குபெற்று விழாவைச் சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சிகள் அனைவரது பாராட்டையும் பெற்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுச்சேவை / தாய் மண்ணின் மீதான பற்று: நமது தாய் மண்ணான தமிழ்நாட்டில் சமீபத்தில் இயற்கை சீற்றத்தால் (கஜா புயல்) சேதமடைந்த தாய் தமிழ்ப் பள்ளியை சீரமைப்பதற்காக நம் பள்ளி மாணவர்கள் தங்களாலான முடிந்த நிதி கொடுத்து உதவினார்கள். கஜா புயலால் சிதைவடைந்த புதுக்கோட்டை மாவட்டம், பெருஞ்சுனை தாய் தமிழ்ப் பள்ளியை சீரமைக்க நம் தமிழ்ப் பள்ளியின் இரு கிளைகளிலும், மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் இணைந்து $694 நிதி திரட்டினார்கள். இதற்கு இணையான தொகை இந்திய ரூபாய் ₹49,000 தாய்த் தமிழ்ப் பள்ளிக்கு நேரடியாக அனுப்பி, அந்த பள்ளியின் சீரமைப்பு வேலைகள் நடைபெற்று வருவதைக் கேட்டறிந்தோம். தேவையை அறிந்து உடனடியாக நிதி அளித்த அனைத்து தன்னார்வளர்களுக்கும், மாணவர்களுக்கும் மற்றும் பெற்றோர்களுக்கும் நம் தமிழ்ப் பள்ளியின் சார்பில் மனமார்ந்த நன்றிகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொள்கிறோம்.

பாதுகாப்பு பயிற்சி: நமது பள்ளியில் அனைவருக்கும் வருடத்திற்கு இரண்டு முறை தீ மற்றும் அவசர கால பாதுகாப்பு பயிற்சியளிக்கப்படுகிறது, அதாவது தீ மற்றும் அவசர காலங்களில் நாம் அனைவரும் எவ்வாறு கட்டிடத்தை விட்டு வெளியேறி பாதுகாப்பான இடத்திற்கு செல்ல வேண்டும் என்பதைப் பற்றிய






செயல்முறை விளக்க பயிற்சி செய்து காண்பிக்கப்படுகிறது.

அங்கிகாரம்: அட்வான்ஸ்எட் (AdvancEd) என்ற தர மதிப்பீட்டு நிறுவனத்திடம் இருந்து நமது பள்ளி அங்கீகாரத்தை (Accreditation) 2015 ஆம் ஆண்டு பெற்றது. அடுத்த ஆண்டு இந்த அங்கீகாரத்தை புதுப்பிப்பதற்கான வேலைகளை தன்னார்வலர்கள் குழு ஆரம்பித்துள்ளது. தர மதிப்பீட்டுக்குத் தேவையான அனைத்து ஆவணங்களையும் தயார் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த முயற்சிக்கு, அனைத்து ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்களின் உதவி மற்றும் ஒத்துழைப்பு மிகவும் அவசியம்.

அமெரிக்க பறை இசைக்குழுவின் பங்கு: “யானை வரும் பின்னே மணியோசை வரும் முன்னே” என்ற சொல்லிற்கு இணங்க, செயின்ட் லூயில் பள்ளிகளில் நடைபெறும் உலகக் பண்பாட்டு நிகழ்ச்சிகளில் பங்கு பெற்று தமிழரின் இசையை வெளிப்படுத்தி தமிழர்களின் பாரம்பரிய கலாச்சாரத்தை அறிமுகப்படுத்துகின்றனர். இது, பொதுப் பள்ளிகளில் இரண்டாவது மொழிக்கான தரப்புள்ளி (credit), அதாவது தமிழ்ப் பள்ளி மாணவர்கள் மொழியை கற்றுக்கொண்டதற்கான மதிப்பெண்ணை பெற்றுத்தருவதற்கு நமது பள்ளியின் தன்னார்வலர்களின் முயற்சியை எளிதாக்குகிறது.

பெற்றோர்களுக்கு: நாளைய சமுதாயம் நன்றாக அமைந்திட இன்றைய பெற்றோர்களின் ஈடுபாடு மிகவும் முக்கியமானது. பெற்றோர்-ஆசிரியர் கூட்டம் மற்றும் பள்ளிக் கூட்டங்களில் தவறாது கலந்து கொண்டு, பாடப் புத்தகம், வீட்டுப் பாடம் மற்றும் பள்ளி நிகழ்வுகள் பற்றிய தங்களின் பின்னூட்டம் நமது பள்ளியின் வளர்ச்சிக்குத் தேவையான ஒன்றாகும். உங்களது ஆலோசனைகள் மற்றும் கருத்துகளை பள்ளியின் மின்னஞ்சல் school@school.motamilsangam.org என்ற முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம் என்பதையும் தெரியப்படுத்திக் கொள்கிறோம்.

பள்ளியின் முன்னேற்றத்திற்காக தொடர்ந்து உழைத்துக் கொண்டிருக்கும் ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் அனைவருக்கும் மிசௌரி தமிழ்ப் பள்ளியின் மனமார்ந்த நன்றிகள்.

மிசௌரி தமிழ்ப் பள்ளி



# புதியதோர் உலகம் செய்வேன்

## நிலை 4

### ஆன்ரோநிக்கஸ் அமல்



1. என் உலகம் மாசு இல்லாமல் இருக்கும்.
2. அன்பு நிறைந்து இருக்கும்.
3. " ஜாதிகள் இல்லையடி பாப்பா" என்று பாரதி சொன்னது போல் ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருக்கும்.
4. "கேடில் விழுச்செல்வம் கல்வி" என்ற வள்ளுவர் சொல்லுக்கு ஏற்ப அனைவர்க்கும் அழியாத கல்வி செல்வம் கிடைக்க வழி செய்வேன்.
5. ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை என்பது போல் அனைவரும் ஒழுக்கமாக வாழ வழிகள் செய்வேன்.

### தரண் அங்கப்பன்



என் உலகம் எதிர்காலத் தொழிநுட்பம் (future technology) மிகுந்ததாக இருக்கும். என் உலகத்தில் வானம் வெள்ளையாகவும், மேகம் நீல நிறமாகவும் இருக்கும். அங்கு இயந்திர மனிதன் காவலராக இருப்பான். அங்கு மெய்நிகர் உண்மை

(virtual reality) மூலமாக எந்த நாட்டிற்கும் எந்த நேரத்திலும் அருகலை(Wi-Fi) இல்லாமலே செல்லலாம். உலக அருகலை (Global Wi-Fi) இருக்கும். கடலுக்கு அடியில் இருந்தால் கூட அந்த அருகலை(Wi-Fi) கிடைக்கும்.

### மிரிதினி நந்தகுமார்



எனக்கு ஒரு புது உலகம் படைக்க சக்தி இருந்தால், நான் அமைதியும் தோழமையும் கொண்ட உலகத்தைப் படைத்திடுவேன். அந்த உலகத்தில் சண்டைகள் இருக்காது. அனைவரும் அன்புடனும் அக்கறையுடனும் பழகுவர். மற்றவர்கள் கவலையைப் போக்க உதவுவர். நண்பர்களுடன் இருக்கும்போது நாம் மகிழ்ச்சியாக இருப்போம். அந்த மகிழ்ச்சி, என் உலகத்தில் அனைவரிடமும் இருக்கும். என் உலகம் சந்தோசம் நிறைத்த உலகமாக இருக்கும்.

### நேஹா மாணிக்கம்



எனக்கு உலகை மாற்றும் சக்தி இருந்தால் நான் மாற்ற விரும்புகிறவை இதோ.. மாசைக் கட்டுப்படுத்தி, எல்லா குழந்தைகளுக்கும் நல்ல குடும்பம், சாப்பாடு, தண்ணீர், வீடு மற்றும் விளையாட்டு சாமான்கள் கிடைக்கச் செய்வேன். எங்கேயும் போர் இல்லாமல் நட்பு மலரச் செய்வேன். எல்லோரும் நல்ல கல்வி பெற நிறைய பள்ளிக்கூடங்கள் அமைப்பேன். எல்லோருக்கும் நல்ல உடல்நிலையும் நல்ல வளமும் பெறச் செய்வேன். கடைசியாக, அமெரிக்கா வரும் தாத்தா பாட்டி, எவ்வளவு மாதங்கள் வேண்டும் என்றாலும் இருக்கலாம் என்ற விதியமைப்பேன்.

### சாரா அசோக்



என்னால் புத்தம் புது உலகம் உருவாக்க முடிந்தால், அந்த உலகத்துல இருக்கும் மக்கள் கவலையே இல்லாமல் மிகவும் சந்தோசமா இருப்பாங்க. அந்த உலகம் மலர்கள், செடிகள், மரங்கள் நிறைந்து பசுமையாக இருக்கும். எப்பொழுதும் வானவில் இருக்கும். எல்லோருக்கும் வீடும் உணவும் இருக்கும். எல்லோரும் வீட்டில் செல்லப் பிராணிகள் வச்சிருப்பாங்க.

### சுஜெய் சுரேஷ்குமார்



நான் எல்லா இடத்திலேயும் தண்ணீர் பீரங்கி (water cannons) வைப்பேன். அதனால் எல்லா ஏழை மக்களுக்கும் தண்ணீர் கிடைக்கும். யாரிடமாவது பணம் இல்லையென்றால் இந்த பீரங்கி பணம் கொடுக்கும், ஆனால். அன்றைக்கு ஒழுங்கா நடந்து கொண்டாதான், இரவு தூங்கும் பொழுது அந்த பணம் அனுப்பப்படும் (teleported) .



## சம்யுக்தா ரமேஷ் பாபு



என்னுடைய உலகம் தூய்மையாக இருக்கவேண்டும். தூய்மையாக இருக்கவேண்டும் என்றால் என்ன செய்யலாம்?
வீட்டில் மரம் வளர்க்கலாம். வளிமண்டலத்தில் புகை சேருவதை இவ்வாறு தடுக்கலாம்.
நீண்ட தூரம் செல்ல, புகை உருவாக்காத மின் வண்டிகள் பயன்படுத்தலாம்
கொஞ்ச தூரம் செல்ல மிதிவண்டி பயன்படுத்தலாம் மற்றும் நடக்கலாம்.

என்னுடைய உலகம் அமைதியாக இருக்கவேண்டும். சத்தங்களும், சண்டை சச்சரவுகளும், குற்றங்களும் இருக்கக்கூடாது. என்னுடைய உலகத்தில் எப்பொழுதும் 60 - 80*F வெப்பநிலை இருக்கவேண்டும். என்னுடைய உலகத்தில் அனைவருக்கும் வீடு இருக்கவேண்டும். பள்ளிகள் சந்தோஷம் நிறைந்த இடங்களாக இருக்கவேண்டும்.

## தியா அருண்



என் உலகம் மிகவும் இனிப்பானதாக இருக்கும். அங்கு அனைத்து வீடுகளும் மிட்டாய்கள் கொண்டு கட்டப்பட்டிருக்கும். நிறைய வீட்டு விலங்குகள் இருக்கும். குழந்தைகளுக்குப் பள்ளிக்கூடம் வாரத்தில் இரண்டு நாட்கள் மட்டுமே இருக்கும். இங்கு மிகவும் பிரபலமான மிட்டாய் கடை “Yummylicious”. இங்கு நீங்கள் உங்கள் விருப்பப்படி மிட்டாய்கள் உருவாக்கவும் செய்யலாம்.

இந்த உலகத்தை எளிதில் கண்டுபிடிக்க முடியாது, பிரபஞ்சத்தில் மறைந்து இருக்கும். இவ்வுலகத்திற்கு பக்கத்தில் சென்றால் அதற்குள் கவர்ந்து இழுக்கப்படுவீர்கள்; உங்கள் உலகத்துக்கு திரும்பப் போக முடியாது. பயப்படாதீர்கள், என் உலகம் மிகவும் இனிமையானது, நீங்கள் மகிழ்ச்சியாக வாழலாம்.

## தியா ஷண்முகம்



என் உலகம் அனைத்தும் கடலாக இருக்கும். தரையில் புல் போன்ற கடற்பாசி இருக்கும்.
என் கடல் உலகத்தில், வீடுகள் மணல் அலங்காரங்களால் அமைக்கப்பட்டிருக்கும்.
மணல் hoeing, கடற்பாசி trimming, மற்றும் வர்த்தக பொருட்களால் மக்கள் பணம் சம்பாதிப்பார்கள் .
குழந்தைகள் குழந்தைகளாகப் பிறக்கவில்லை. அவர்கள் முதன் முதலில் தலைப்பிரட்டையாக(tadpole) பிறந்த பின்னர் அவர்கள் 7-வது வயதில் குழந்தைகளாக மாறி வருகின்றனர்
மக்கள் பறக்கும் கார்கள் மூலமாக பிரயாணம் செய்வார்கள்.

## சஞ்சனா திரவியம்



நான் வாழ விரும்பும் உலகத்தில் மக்கள் அனைவரும் சுதந்திரமாகவும், சமத்துவமாகவும், சகோதரதத்துவமாகவும் இருக்க வேண்டும்.

மேலும் நாம் வாழும் பூமியானது சுத்தமாகவும், சுகாதாரமாகவும், மாசற்றதாகவும், சந்தோசமாகவும் இருக்க வேண்டும்.

உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் உணவும், வீடும், உடைகளும் கண்டிப்பாகக் கிடைக்க வேண்டும். அவரவர் குடும்பத்துடனும், நண்பர்களுடனும் எல்லா வளங்களுடனும் நிம்மதியாக வாழ வேண்டும்.

## ஸ்ருதி செந்தில்



என் உலகத்தில் பணம் இருக்காது, ஏனெனில் அதுதான் பலரை கவர்ந்து அடிமையாக்குகிறது!

என் உலகத்தில் நிறைய சுதந்திரம் இருக்கும்! அதுதான் எல்லாவற்றிற்கும் அடிப்படை உரிமை.

என் உலகத்தில் அன்பு, பாசம் இருக்கும், அதுதான் நம் வாழ்க்கையை நிர்ணயித்து நம்முடன் பயணிக்கும் நல்ல குணம்! என் உலகத்தில் தூய்மையும் பசுமையும் நிறைந்து இருக்கும், அதுதான் நம்முடைய உடல் நலத்திற்கு முக்கியமானது!

என் உலகத்தில் எல்லோருக்கும் கல்வி கிடைக்கும், அதுதான் வளர்ச்சிக்கு முக்கியமானது!

## ஸ்ரீநிதி செந்தில்நாதன்



என் உலகம், இனிய பட்டாம்பூச்சிகளின் உலகம். அனைத்து செடி, கொடி மரங்களும் பூத்துக் குலுங்கட்டும். எங்கும் பட்டாம்பூச்சிகள் பறக்கின்றன. காற்றில் இனிய வாசம் மிதந்து வருகின்றது. வீடுகள் மரங்களால் கட்டப்பட்டுள்ளன. சூரியன் வெகு பிரகாசமாக ஒளிர்கிறது. குழந்தைகள் விளையாட்டுடன் பள்ளியில் கல்வி கற்கிறார்கள். ஒருவருக்கொருவர் நட்புடன் உறவாடுகிறார்கள். எங்கும் நெகிழிகள்(plastic) இல்லை, மாசு இல்லாத சூழ்நிலை, மிருகங்களைக் கொல்லாமை என மக்கள் மகிழ்ச்சியான வாழ்க்கை வாழ்கிறார்கள்.

## உமா நாராயணன்



உலகத்தில் ஒரு மில்லியன் குழந்தைகளுக்கு மேல் உணவு இல்லாமல் கஷ்டப்படுகிறார்கள். அதே நேரத்தில் பல நாடுகளில் உணவை வீண் அடிக்கிறார்கள். நான் ஒரு புதிய உலகம் படைத்தால், இந்த உணவை வீண் அடிக்காமல் உணவு இல்லாதவர்களுக்கு கொடுக்க வழி கண்டுபிடித்து அதை வழங்குவேன். இதற்கு முதலாவதாக, வளர்ந்த நாடுகளில், ஒவ்வொரு குடும்பமும் அவர்களுக்கு தேவையான உணவை மட்டும் சமைத்து உண்ண வேண்டும். வீண் அடிப்பவர்களுக்குத் தண்டனை தர வேண்டும். அப்படி செய்தால் உணவு வீணாவது குறையும். அதில் சேமிக்கும் பணத்தை உணவு இல்லாத நாடுகளுக்கு அளித்து உதவலாம்.

## யஷ்வந்திகா செந்தில்குமார்

என் உலகம் மிக அழகாக இருக்கும். பார்க்கும் இடமெல்லாம் பச்சைப் பசேலென்று இருக்கும். அங்கங்கு நீரோடை ஓடிக் கொண்டு,



ரம்மியமான இசை மீட்கும். உலக வெப்பமயமாதல் நடக்காது. மக்கள் அனைவரும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அன்புடன் இருப்பர். ஏழை, பணக்காரர் என்ற பாகுபாடு இருக்காது. அங்கு அனைவரும் சரிசமம்.

## லக்ஷிதா ராஜா


என் உலகம் எங்கும் பசுமையும் செழிப்பும் நிறைந்து இருக்கும்

ஏழை, பணக்காரர், நிறம், ஜாதி வேறுபாடு இல்லாமல் எல்லோரும் ஒற்றுமையாக இருப்பார்கள்

யாரும் எதையும் வீணாக்கமாட்டார்கள்

அனைவரும் ஆரோக்கியமாக இருப்பார்கள்

தொழில்நுட்பம் சிறந்து விளங்கி மக்களுக்கு உதவும்.



## காவ்யா கோபிநாத்



1. எந்த மிருகமும் மனிதர்களால் அழியாது.
2. யாரும் புலால் சாப்பிட மாட்டார்கள்.
3. யாரும் பணத்துக்காகவும் தேவையான பொருட்களுக்காகவும் மிருகங்களைக் கொல்ல மாட்டார்கள்.
4. பசுமாட்டிலிருந்து பாதிப் பாலை மட்டுமே கறப்பார்கள். அதிலும் இயந்திரங்கள் எதுவும் இல்லாமல் கைகளில் மட்டுமே கறப்பார்கள். மிச்சம் உள்ள பாலை கன்றுக்குட்டிக்கே விட்டு விடுவார்கள்.
5. அனைத்து சீருந்துகளும் மின்சக்தியில் மட்டுமே இயங்கும்.மேலும், காற்றை மாசுபடுத்தாமல், அனைவரும் அதிகமாக மாட்டு வண்டி, குதிரை வண்டி, மிதிவண்டிகளில் செல்வார்கள்.
6. மருந்துகள் தெளிக்காமல் பூச்சிகளைக் கொன்று பயிர்களைக் காக்க உதவும் சிலந்திகளும் பறவைகளும் அழியாமல் காக்கப்படும்.
7. திருடர்கள், கொள்ளைக்காரர்கள், கடத்தல் செய்பவர்கள் என்று யாருமே இருக்க மாட்டார்கள்.
8. வயதாவது மட்டுமே மரணத்தின் காரணமாக இருக்கும். கேன்சர் போன்ற நோய்கள் இருக்காது.

# சித்திரம் பேசுதடி



ஆதர்ஷ் ராம் அருண்குமார்



அஜய் கிருஷ்ணா சங்கர்



தீக்ஷா முத்துராமன்



தெய்வஸ்ரீ ராமகார்த்திகேயன்



இயலினி சாமிநாதன்



பெரோனியா இராபர்ட் ராஜகுமார்


# -மழலை, நிலை 1 மாணவர்கள்



இனியா சரவணன்



ஜோனாஸ் ரூபன்



காவியா செந்தில்குமார்



லயா செந்தில்



லிதிக்ஷா புவியரசு



மகேஷ் போடப்பாட்டி



மான்ஷா ஸ்ரீசெல்வராஜ்



மிதுன் ஆனந்த்



நவீன் ஜெய்கணேஷ்



நித்ரா கருணாகரன்




பிரத்யங்கா உமா பிரதீப்



ஷா. ரோஷ்னா பர்வின்



சான்வி பாண்டுரங்கன்



சௌம்யா ஜானகிராம்



சித்தார்த் வேங்கவாசி




சித்தார்த் ராஜசேகரகண்ணன்




ஸ்கைரா சுதாகர்



வருண் காமேஷ்



வினிஷா சுதாகர்




விதுர் ராயப்ரோலு



விஷ்வா மணிகண்டன்



ஆருஷி கோகுலகிருஷ்ணன்



ம்ரிதுளா கார்த்திக்



சிரேஷ்தி சிவசண்முகம்



# விடுகதைகள்

தலையில் கிரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன? (அன்னாசிப்பழம்)

கையை வெட்டுவார்; கழுத்தை வெட்டுவார், ஆனாலும் நல்லவர் யார் அவர்? (தைய்யல்காரர்)

ஆகாரமாக எதையும் தந்தால் சாப்பிடுவேன், ஆனால் நீரை குடிக்க தந்தால் இறந்து விடுவேன், நான் யார்? (நெருப்பு)

எவர் கையிலும் சிக்காத கல் எங்கும் விற்காத கல், அது என்ன? (விக்கல்)

செய்தி வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே, அது என்ன? (தோலைபேசி)

கருப்பர்கள் மாநாடு போட்ட இடத்தில் கண்ணீர் பிரவாகம், அது என்ன? ( மேகம், மழை)

உடல் சிவப்பு, வாய் அகலம், உணவு காகிதம் – நான் யார் ? (அஞ்சல்பெட்டி)

உயிர் இல்லாத நீதிபதியிடம் ஒழுங்கான நியாயம் அது என்ன? (தராசு)

உயிரில்லாதவனுக்கு உடம்பெல்லாம் நரம்பு, அது என்ன? (பாய்)

ஆழாக்கு தோண்டி தாலி ஒரு மண்டியிட்டு அன்னாந்து பார்த்தால் தொண்ணுறு முட்டை அதுஎன்ன? (தென்னை)

எடுக்க எடுக்க வளரும் , எண்ணெயை கண்டால் படிந்துவிடும், அது என்ன? (முடி)

பிறக்கும்போது வால் உண்டு; இறக்கும்போது வால் இல்லை. அது என்ன? (தவளை)

நடந்தவன் நின்றான். கத்தியை எடுத்து தலையைச் சீவினேன், மறுபடி நடந்தான். அவன் யார்? (பென்சில்)



ராமலக்ஷ்மி
ஆனந்த்



பூவோடு பிறந்து; நாவோடு கலந்து விருந்தாவான், மருந்தாவான். அவன் யார்? (தேன்)

பூ பூப்பது கண்ணுக்கு தெரியும். காய் காய்ப்பது கண்ணுக்கு தெரியாது. அது என்ன? (வேர்கடலை)

அரைச்சாண் ராணிக்கு வயிற்றில் ஆயிரம் முத்துக்கள். அது என்ன? (வெண்டைக்காய்)

எத்தனை தரம் சுற்றினாலும் தலை சுற்றாது, அது என்ன? (மின்விசிறி)

இவன் வாலுக்கு வையகமே நடுங்கும் அவன் யார்? (தேள்)

ஒரு வீட்டுக்கு இரண்டு வாசல்படி. அது என்ன? (மூக்கு)

ஓயாமல் இரையும் இயந்திரமல்ல, உருண்டோடி வரும் பந்து அல்ல அது என்ன? (கடல்)




## நம் முதுநிலை மாணவர்கள் தமக்குப் பிடித்த திருக்குறளைத் தேர்ந்தெடுத்து, அதற்கு விளக்கம் கொடுக்கிறார்கள்

### ஹ்ருதய் வி. சுஸ்வரம், நிலை 7

**பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்**
**இறைவ னடிசேரா தார்**



இந்தக் குறளில், திருவள்ளுவர் நம்முடைய வாழ்க்கையை ஒரு பெரிய கடலுடன் ஒப்பிடுகிறார். இதனால் எனக்கு இந்தக் குறள் மிகவும் பிடிக்கும். கடலைப் போல் நம்முடைய வாழ்க்கை எல்லை இல்லாதது. கடலில் உயர் அலையும் தாழ்வு அலையும் மாறி மாறி வரும். அது போல் நம் வாழ்க்கையில் வெற்றியும் தோல்வியும் கலந்து இருக்கும். கடலில் நீந்துவது கடினம். பெரிய அலை, சுறா போன்ற நிறைய ஆபத்தான விஷயங்கள் இருக்கும். குடிக்கத் தண்ணீரும், உணவும் கிடைக்காது. அது போல் வாழ்க்கையில் சில தீய மனிதர்கள், தடைகள் போன்றவை வந்து துன்பம் தரும். கடலில் நீந்துவதை நிறுத்தினால் நாம் மூழ்கி விடுவோம். அதுபோல் வாழ்க்கையில் கடவுளை நம்பாமல், முயற்சி செய்யாமல் இருந்தால் வெற்றி கிடைக்காது போய்விடும். அதனால் நாம் இறைவன் மீது நம்பிக்கையோடு வாழ வேண்டும்.

***

### மனிஷா முத்துக்கருப்பன், நிலை 7

**இலன்என்று தீயவை செய்யற்க செய்யின்**
**இலன்ஆகும் மற்றும் பெயர்த்து.**



இந்தத் திருக்குறளின் பொருள்: ஒருவன் ஏழையாக இருந்தாலும், அந்த ஏழ்மையைப் போக்குவதற்காக தீய செயல்களைச் செய்யக்கூடாது, தீய செயல்களைச் செய்தால், இருப்பதையும் இழந்து, அவன் மேலும் ஏழை ஆகி விடுவான். இந்தத் திருக்குறள் எனக்குப் பிடிக்கும், ஏனென்றால் நீ துன்பம் நேரிடும்போது அதைப் பாலமாகக் கொண்டு, எதிர்நீச்சல் போட்டு முன்னேற வேண்டும் என்று சொல்லித் தருகிறது.

***

### மணிஷா விஜய், நிலை 7

**முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து**
**அகநக நட்பது நட்பு.**



நம்மை நேரில் பார்க்கும் போது இனிக்க இனிக்கப் பேசிவிட்டு, பிறகு நம்மைப் பற்றி இழிவாகப் பேசுபவர்களின் நட்பு உண்மையான நட்பன்று. உளமாற உள்ளத்தின் அடித்தளத்திலிருந்து அன்புகொண்டு, நமக்காக உயிரையும் கொடுக்கத் தயங்காதவர்களின் நட்பே சிறந்ததாகும்.

நமது இன்பத்தில் மட்டுமல்ல, நமக்கு ஒரு தீங்கு ஏற்படும்போதும் தோள் கொடுத்து உதவி செய்பவர்களின் நட்பே சிறந்ததாகும். நாம் மகிழ்ச்சியாக இருக்கும்போது நம்மிடம் பழகிவிட்டு, நமக்கு ஓர் இடர் வரும்போது நம்மைவிட்டு நழுவிச் செல்பவர்களின் நட்பு சிறந்த நட்பல்ல. நட்பு என்பது ஒருதலைபட்சமாக இருக்கக் கூடாது.

இருவரும் ஒருவருக்கொருவர் மனமாற நேசிப்பதே உண்மையான நட்பாகும்.

பாரி இறந்த பின் உண்ணா நோன்பிருந்து உயிர்விட்ட கபிலர், தமிழ் வாழ அதிசய நெல்லிக்கனியைத் தன் தோழி ஔவைக்குக் கொடுத்த அதியமான், கோப்பெருஞ்சோழன்- பிசிராந்தையார், கிருஷ்ணபகவான் - குசேலர், துரியோதனன் - கர்ணன் போன்றோரின் நட்பு சிறந்த நட்புக்கான உதாரணங்கள்.

***

## நவீன் நாராயணன், நிலை 6



### நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பின்றி
### ஒல்லும்வாய் ஊன்றும் நிலை.

இது எனக்கு மிகவும் பிடித்தமான குறள், ஏனென்றால், உயர்ந்த மட்டத்தில் நட்பை விளக்குகிறது. நான் பள்ளி பாடத்திற்காக ரோலண்ட் ஸ்மித் எழுதிய “பீக்” புத்தகத்தை வாசித்தபோது, மலை ஏறுபவருக்கும் ஒரு ஷெர்பாவிற்கும் இடையே உருவாகும் எதிர்பாராத நட்பைப் பற்றிப் படித்தேன். எல்லா நேரங்களிலும், சூழ்நிலைகளிலும் ஒருவரை ஆதரிக்கும் சக்தியைக் கொண்டது நட்பு. அதிலிருந்து உயர்வான நட்பை பற்றி அறிந்தேன். ஒரு உண்மையான நண்பர் மட்டுமே எதையும் எதிர்பார்க்காமல் உதவி செய்பவர். ஒரு நல்ல நண்பர் உங்கள் வாழ்நாள் முழுவதிலும் உங்களுடன் வருபவர். அவர் உங்களுடன் போட்டியிடுவதில்லை. எனவே, இந்த பண்பை நான் விரும்புகிறேன், ஏனென்றால் நம் வாழ்வில், நட்பு மிகவும் முக்கியம். நான் ஒரு நல்ல நண்பனாக இருக்க வேண்டும். எனக்கும் நல்ல நண்பர்கள் கிடைக்க விரும்புகிறேன்.

***

## ப்ரஜித் ராயப்ரொலு, நிலை 6

### கற்க கசடறக் கற்பவை கற்றபின்
### நிற்க அதற்குத் தக.



மாணவனாகிய எனக்கு கல்வியின் முக்கியத்துவத்தை இக்குறள் உணர்த்துவதனால் எனக்கு மிகவும் பிடித்துள்ளது. கற்றுக்கொண்டவற்றை ஒருபோதும் மறக்காமல் அவற்றை அடிப்படையாகக் கொண்டு செயல்பட வேண்டும்.

எதிர்காலத்தில் ஒரு நல்ல மனிதராக விளங்கக் கடினமாக படிக்க வேண்டும். சரியான விஷயங்களை சந்தேகமின்றி கற்றுக்கொள்ள வேண்டும். ஒரு கொள்கை ரீதியான வாழ்க்கையை நடத்துவதோடு, நாம் கற்றுக்கொண்டவற்றின் மூலம் உறுதியுடன் நிற்க வேண்டும். எந்தவிதமான சூழ்நிலையிலும் உயிர் வாழ்வதற்கும், வளர்வதற்கும் இந்த வகை மனப்பான்மை மிக அவசியம்.

***

## ரிதன்யா சிவபாலன், நிலை 6

### இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்
### நாண நன்னயம் செய்து விடல்



எனக்கு இந்த திருக்குறள் ரொம்ப பிடிக்கும், ஏன்னா எல்லாருக்கும் நம்ம நல்லதே பண்ணனும். அப்படி பண்ணும்போது மனசு ரொம்ப சந்தோசமா இருக்கும். நீங்க தீமை செய்யறவங்களுக்கும் நன்மை செய்யும்போது, அவங்க திருந்தி நல்லவங்களா மாறிடுவாங்க. நீ கெட்டவங்களுக்கும் நல்லதே செய்யும்போது மன அமைதி கிடைக்கும். நான் இந்த திருக்குறளை என்னால் முடிந்த அளவு கடைபிடிக்க முயல்கிறேன். பள்ளியில் என் நண்பர்களுக்கும் இதை எடுத்துக் கூறுவேன். இந்த திருக்குறளை நான் தமிழ்ப் பள்ளியில் கற்றேன். என் பாட்டிக்கும் இந்த குறள் ரொம்பப் பிடிக்கும். இதை நான் அவர்களிடமும் சொல்லி, பொருள் கேட்டு அறிந்துகொண்டேன்

***

## ரியா அசோக், நிலை 6

### நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
### அன்றே மறப்பது நன்று



ஏன் எனக்கு இந்த குறள் பிடிக்கும்னா, கம்ப்யூட்டர், தொலைக்காட்சி, தொலைபேசி ஆகியவற்றுக்கு இல்லாத ஒன்றான, ‘மறக்கும் ஆற்றலை’ மனிதர்களுக்குக் கடவுள் கொடுத்திருக்கார். இது மேலோட்டமா பார்த்தா கெட்ட விசயம் போலத் தோன்றும். ஆனா யோசிச்சுப் பாருங்க, அடுத்தவங்க செய்த கெட்டதை மன்னிச்சு மறக்கலைனா, இந்த உலகத்துல நமக்கு உறவினர்கள், நண்பர்கள் யாருமே இருக்க மாட்டார்கள்.

தண்ணீர் கலந்த பாலை அன்னப் பறவைக்குக் கொடுத்தால், எப்படி நீரை விட்டுட்டு பாலை மட்டும் பிரித்துக் குடிக்குமோ, அதுபோல நமக்கு யாராவது நல்லது செய்தால் அதை மறக்காமல் நினைவில் வைத்துக் கொள்ளவேண்டும்; தீமை செய்திருந்தால் அதை உடனே மன்னித்து மறந்துவிட வேண்டும்.

***

## ரோஷினி சக்கரவர்த்தி, நிலை 6

### இனிய உளவாக இன்னாத கூறல்
### கனியிருப்பக் காய்கவர்ந் தற்று

ஒரு மரத்தில் நிறைய காய்களும், சில கனிகளும் இருந்தால், நாம் அருகில் இருக்கிறது என்பதற்காக காய்களை பறித்து



உண்பதில்லை, கனிகளைத்தான் தேடிப் பறித்து உண்கிறோம். அதுபோல் நாம் மற்றவர்கள் நம்மிடம் கனி போன்ற இனிய சொற்களைப் பேசவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம். அப்படி இருக்க, நாமும் பிறரிடம் கனிபோன்ற சொற்களை பயன்படுத்துவதுதானே சிறந்தது?

நான் ஒன்றாம் நிலை படிக்கும் போது, திருக்குறள் போட்டியில் இந்த குறளை விளக்கத்துடன் கூறினேன். அதற்காக நடுவர் என்னை, அனைத்து குழந்தைகள் முன்பு மிகவும் பாராட்டினார், அதனால் இந்த குறள் எனக்கு மிகவும் பிடிக்கும். இந்த புத்தாண்டிலிருந்து, எனக்குப் பிடித்த இந்த குறள் வழி நடப்பது என முடிவெடுத்துள்ளேன். இதனைப் படித்த பிறகு, அடுத்தவரிடம் பேசும்போது, நீங்களும் கனி போல் இனிமையாகச் சுவைக்கும் சொற்களைப் பயன்படுத்துவீர்கள் என நம்புகிறேன்.

***

## ரோஷ்னி ரமேஷ்குமார், நிலை 6

### தகுதி எனவொன்று நன்றே பகுதியால்
### பாற்பட்டு ஒழுகப் பெறின்



பாகுபாடு பார்க்காமல், எல்லோரிடமும் நடுநிலை கடைபிடித்தல் சிறந்த அறமாகும். நீதி தேவதை தன் கண்களை கருப்புத்துணியால் மறைத்துக் கொண்டு இருப்பதுபோல், நடுநிலையாகச் செயல்படுவோர், தன் முன்னால் நிற்பவர் தன் நண்பனா, உறவினரா, எதிரியா, ஏழையா, பணக்காரனா, நல்லவனா, கெட்டவனா எனப் பார்க்காமல், தன் முன்னே வைக்கப்படும் அறிக்கை மற்றும் வாதங்களில் உள்ள நியாய தர்மங்களை ஆராய்ந்து நீதி வழங்க வேண்டும். அமெரிக்காவில் வாழும் நாம், பலவகையான மனிதர்களோடு சேர்ந்து வாழ்கிறோம். இனம், மதம், பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்ற பலவகையான பாகுபாடுகளைத் தாண்டி அனைவரையும் நாம் சமமாக எண்ணி நடத்த வேண்டும். மக்களிடயே பேதம் பார்க்காமல் நடுநிலையோடு பழக வேண்டும் என்பதையே இந்தக் குறள் உணர்த்துகிறது. இவ்வாறு நாம் நடந்தால் நம் வாழ்க்கை அன்பும், அமைதியும் நிறைந்து இனிமையாக இருக்கும்.

***

## ஷிவானி ஐயனார், நிலை 6

### மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன்
### ஆகுல நீர பிற



திருக்குறளில் உள்ள 1330 குறட்பாக்களும், புண்ணியம்(அறம்), செல்வம்(பொருள்), காதல்(இன்பம்) ஆகிய 3 பிரிவுகளில் அடங்கும். இவற்றுள் ரொம்ப முக்கியமானது, 'புண்ணியம்'. அதனாலதான் நான் இந்தத் திருக்குறளைத் தேர்ந்தெடுத்தேன். இது, தனி மனித நற்பண்புகள், வாழ்க்கைக்கு எவ்வளவு இன்றியமையாதன என்பது பற்றிக் கூறுகிறது. உயர்ந்த மனமும், நல்ல வாழ்க்கையும் அமையணும்னா, உங்களுக்கு கெட்ட எண்ணங்கள் இல்லாத சுத்தமான மனது வேண்டும். அதுவே, வேற நல்ல காரியம் செய்யறதைப்போல புண்ணியம் கொடுக்கும். காந்திஜி சொன்ன மாதிரி, உங்கள் விதியை அது மாற்றும்- "Your beliefs become your thoughts, Your thoughts become your words, Your words become your actions, Your actions become your habits, Your habits become your values, Your values become your destiny."

***

## ஷ்ரேயஸ் பல்லாவூர், நிலை 6

### கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு
### மாடல்ல மற்றை யவை



நான் இந்தக் குறளைத் தேர்ந்தெடுத்ததற்கான காரணம், கல்வியின் முக்கியத்துவத்தை இன்றைய தலைமுறை பிள்ளைகள் அறியவேண்டும். இந்தக் குறள் கல்வியை சார்ந்து வருவதால் நான் இதை முக்கியமாகக் கருதுகிறேன் ஒருவனுக்கு அழிவு இல்லாத சிறந்த செல்வம் கல்வியே ஆகும், கல்வியைத் தவிர மற்றப் பொருள்கள் அத்தகைய சிறப்புடைய செல்வங்கள் அல்ல.

***

## சுஜீத்பாலா ராஜகோபால், நிலை 6

### தீயினால் சுட்ட புண் உள்ளாறும் ஆறாதே
### நாவினால் சுட்ட வடு

இந்தக் குறள் என்னைக் கவர்ந்த ஒன்று. அடக்கமுடைமை என்ற பண்பை எனது வாழ்வில் எப்பொழுதும் கடைபிடிக்க வேண்டும் என்பதற்காக இந்தத் திருக்குறளை நான் தேர்வு செய்தேன். நல்ல மனிதனாக இந்த உலகத்தில் வாழ்வதற்கு, என்னை பண்படுத்துவதற்கு இந்த குறள் உதவியாக உள்ளது. மெய், மொழி, மனம் ஆகியவை தீய வழியில் செல்லாமல் அடக்கத்தை கொண்டிருப்பதன் பயனையும் சிறப்பையும் கூறும் அதிகாரம். நாக்கு ஓர் கொடூரமான ஆயுதம் என்பதால் சொற்காத்தல் வலியுறுத்தப்படுகிறது. உடம்பில் தீயினால் சுட்டதினால் உண்டான காயம் ஆறிவிடும்; அனால் கடும் சொற்களால் ஏற்பட்ட மனதின் காயம் ஆறாமல் வடுவாகி நெடுநாள் நிற்கும். எனவே எப்போதும் அடக்கத்தோடு யாரையும் காயப்படுத்தாத சொற்களையே பேசவேண்டும்.



***

## அக்சீதா சந்தோஷ்குமார், நிலை 6

### காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
### ஞாலத்தின் மாணப் பெரிது



தேவைப்படும் காலத்தில் செய்யப்படும் உதவி சிறிதளவாக இருந்தாலும், அது உலகத்தைவிட பெரிதாக மதிக்கப்படும். என் வகுப்புத் தோழி கிமோராவின் வீடு தீ விபத்தில் மிகவும் பாதிக்கப்பட்ட போது, என் பள்ளியில் இருந்து எல்லோரும் நிதி சேகரித்து கொடுத்தோம். அவர்கள் வீடு புதுப்பிக்கப்பட்டு மீண்டும் குடியேறினர். உற்ற நேரத்தில் நாங்கள் செய்த உதவி அவர்களுக்கு மிகவும் உபயோகமானதாகவும், பெருந்துணையாகவும் இருந்தது. இந்த குரள் அப்பொருளை உணர்த்தியதால் எனக்கு மிகவும் பிடித்தது. இதுபோல், இயற்கை சீற்றங்களால் பாதிக்கப்பட்டோருக்கு நிதி நிவாரணம் திரட்டும்போது நம்மால் முடிந்த உதவியை தவறாமல் செய்ய வேண்டும்.

***

### விகுந்த் நந்தகுமார், நிலை 7

**அறிவினுள் எல்லாந் தலையென்ப தீய**
**செறுவார்க்கும் செய்யா விடல்**



நம் அறிவில் சிறந்தது, பிறர் நமக்குச் செய்யும் தீமையை நாம் அவர்களுக்கு பதிலுக்குச் செய்யாமல் இருப்பதாகும். அதனால் மனம் பழிவாங்கும் எண்ணமில்லாமல் அமைதியாக இருக்கும், கோபங்கள் இருக்காது. நிதானமாகச் சிந்திக்கலாம். பழிவாங்கும் எண்ணம் மேலும் மேலும் தீமையை உண்டாக்கும். அதனால் தவறுக்கான தீர்வு கிடைக்காமல், மேலும் தவறுகள் வளர்ந்துகொண்டே போகும். இந்தக் குறளை நாம் அனைவரும் பின்பற்றினால், மற்றவர்களிடம் சண்டையிடாமல் மகிழ்ச்சியாக வாழலாம்.

***

### யாஷிகா ராஜா, நிலை 7

**கணைகொடிது யாழ்கோடு செவ்விதுஆங் கன்ன**
**வினைபடு பாலால் கொளல்.**



அம்பு நேரான வடிவுடையது, ஆனால் கொடிய பலன் தரும். யாழின் கழுத்து வளைந்து இருக்கும், ஆனால் இனிமையான இசையைத் தரும். சில பொருட்களின் தோற்றம் நேராக இருக்கும், ஆனால் அதன் பலன் நன்மை தராது. சில பொருட்களின் தோற்றம் வளைந்து இருக்கும், ஆனால் அதன் பலன் நேர்மையாக இருக்கும். ஒருவரின் உருவத்தை வைத்து அவரை எடை போடக்கூடாது. அவருடைய செயல்களை வைத்து எடைபோட வேண்டும். ஒருவருக்கு ஒழுக்கம் முக்கியமான பண்பு, அதனால் இந்த குறளைத் தேர்ந்தெடுத்தேன். நம் செயல்களே நம்முடைய அடையாளம். எனவே நல்லொழுக்க செயல்களே நல்ல பெயர் வாங்கி தரும்.

# என்றும் அழியா பழமொழிகள்

ராஜலக்ஷ்மி
ரமேஷ் பாபு



**இக்கரைக்கு அக்கரை பச்சை**

**சமர்த்தன் சந்தைக்குப்போனால் கொள்ளவும் மாட்டான் கொடுக்கவும் மாட்டான்**

**பூனைக்கும் தோழன் பாலுக்கும் தோழன்**

**தாயைப் போல பிள்ளை நூலைப் போல சேலை**

**தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்**

**ஒரு பானை சோத்துக்கு ஒரு சோறு பதம்**

**தினை விதைத்தவன் தினை அறுப்பான்**

**காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு**

**ஊர் இரண்டுபட்டால் கூத்தாடிக்கு கொண்டாட்டம்**

**பழக பழகப் பாலும் புளிக்கும்**

**சோத்துல உள்ள கல்லை எடுக்க முடியலை சொக்கநான்கோயில் வரிகல்லை பிடுங்கறேன்னு சொன்னானாம்**

**எலி வலை ஆனாலும் தன் வலை வேண்டும்**

**வெச்சா குடுமி சிரைச்சா மொட்டை**

**ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி**

**யானை அசைந்து தின்னும் வீடு அசையாமல் தின்னும்**

**சிறுக கட்டி பெறுக வாழ்**

**போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து**

**கல்லடி படலாம் சொல்லடி படக்கூடாது**





# ஃபெட்னா 2018 பயண அனுபவம்

ஃபெட்னா 2018” - வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 31 ஆவது ஆண்டு விழா, டல்லாஸ் மாநகரில் நடைபெற்றது. இந்தப் பெருவிழாவிற்கு செயின்ட் லூயிசிலிருந்து ஓர் பெரிய குழுவாகப் பேருந்தில் சென்று வந்த பயண அனுபவங்களை இங்கே உங்களிடம் பகிர்கிறேன்.

2014 இல் பேரவையின் விழா, நாங்கள் வாழும் செயின்ட் லூயிஸ் நகரிலேயே நடைபெற, விழாவை நடத்தும் குழுவின் ஒரு சிறு அங்கமாக இருந்து விழாவில் கலந்து கொண்டது ஒரு புது அனுபவமாக இருந்தது. ஒரு வெளிநாட்டில் அத்துனை தமிழ் மக்களை ஒரு சேரப் பார்த்த முதல் அனுபவமும் அதுவே. நம் தமிழ்நாட்டில் 3 நாட்கள் நடைபெறும் திருமண நிகழ்வைப் போல ஜேஜே என்று இருந்தது அந்த அனுபவம்.

அந்த அனுபவத்தை மீண்டும் பெற விழைந்து டல்லாஸ் பயணத்திற்கு ஆயத்தமானோம். அப்பப்பா, எத்தனை நேர்த்தியான ஏற்பாடுகள். பயண ஒருங்கிணைப்பாளர்களின் செம்மையான பணிகள் கண் கலங்க வைத்தன. பயணத்திற்கான திட்டமிடலும், ஆலோசனைகளும் கிட்டத்தட்ட ஒரு மாதத்திற்கு முன்பிருந்தே தொடங்கின.பயணத்திற்கான பேருந்து, தங்கும் விடுதிகள், பேரவையின் அனுமதிச்சீட்டு, விழாவில் உணவுச்சீட்டு, பயணத்தின் போது வேண்டிய உணவு மற்றும் சிற்றுண்டிகள், பயணிக்கும் அனைவருக்கும் மிசௌரி தமிழ்ச் சங்கத்தின் முத்திரை பதிக்கப்பட்ட நீல நிறச் சட்டைகள் என அனைத்தும் திட்டமிடப்பட்டு கனக்கச்சிதமாக ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

சுமார் 12 குடும்பங்கள் சேர்ந்து, 53 நபர்களாக புகைப்படங்கள் எடுத்து நினைவுகளைப் பதிவு செய்துவிட்டு வண்டியைக் கிளப்பினோம். ஒவ்வொருவரின் அறிமுகம், தன் முந்தைய ஃபெட்னா அனுபவங்கள் எனத் தொடங்கி, ஓரளவு சுமாராகப் பாடும் எங்கள் இசைக்குழு மெல்லிசைப் பாடல்களை இசைக்கத் துவங்க, அந்த ஆர்வத்தில் பெரியவர் முதல் சிறியவர் வரை மூன்று தலை முறையினரும் தன் இசைத்திறனை வெளிக்காட்ட, உடன் பறை இசையும் இணைய, பாடல்கள் வேகமெடுக்க, பேருந்தே உற்சாக வெள்ளத்தில் கொண்டாடியபடி விரைந்தது. மதிய உணவு முடித்து மீண்டும் உற்சாகம் குறையாமல் மௌனமொழி, வார்த்தை விளையாட்டு எனப் பல விளையாட்டுகளை அரங்கேற்றி இரவு உணவிற்கு முன் டல்லாஸ் நகரை அடைந்தோம்..."சென்னை கஃபே” என்ற தென்னிந்திய உணவகத்தில் பலவகையான உணவைச் சுவைத்து பீடாவுடன் நிறைவு செய்து தங்கும் விடுதிக்குச் சென்று இளைப்பாறினோம்.

கதிரவனின் அருட்கரங்கள் மேலெழும்ப, விடிந்தது அழகியதொரு காலைப்பொழுது. அலங்கார உடையணிந்து பலப்பல வண்ணங்களில் பெண்களும் குழந்தைகளும் ஜொலிக்க, கம்பீரமாய் வேட்டி சட்டையில் வலம் வந்தனர் நம் குடும்பத் தலைவர்கள். தங்கும் விடுதியிலிருந்து பேருந்தில் கிளம்பி, விழா நிகழும் அரங்கை அடைந்தோம். “டாக்டர் பெப்பர் அரீனா” என்று அழைக்கப்படும் அந்த அரங்கம் வெளித் தோற்றத்தில் சிரியதாகக் காணப்பட்டாலும் உள்நுழைந்ததும் தன் பிரம்மாண்டத்தை எடுத்துரைத்தது. அந்தப் பெரும் அரங்கின் பிரதானப் பகுதியில், தமிழர் கட்டிடக்கலையின் மணிமகுடமான தஞ்சைப் பெரிய கோயிலைக் கிட்டத்தட்ட அதே அழகுடன் வடிவமைத்திருந்த முயற்சி பெரும் பாராட்டுதலுக்குரியது. அந்த அழகிய வடிவத்தை ரசித்த வண்ணம் இருக்கைகளைத் தேர்வு செய்து அமர்ந்தோம்.







## பிச்சம்மாள் வேலாயுதம்

பேரவை விழாவின் முதல் நாளில், சிலம்பம், பறை, கரகம் என பழந்தமிழர் கலைகள் அனைத்தும் தமிழ்நாட்டிலிருந்து வருகை தந்திருந்த கலைஞர்கள் மூலம் அரங்கேற, நம் மிசௌரி பறைக்குழுவினரும் அவர்களுடன் இணைந்து மேடையேறி அசத்தியது கண்கொள்ளாக் காட்சி. அய்யா திரு.சுபவீரபாண்டியனின் கருத்துக்களம் சிந்திக்க வைக்க, மதிய உணவுடன் பேரவையின் சிறப்பு விருது வழங்கும் பகுதியை ரசித்து மகிழ்ந்தோம். மாலை திரு.ஞானசம்பந்தன் அவர்களின் கவியரங்கம் களைகட்ட, தொடர்ந்து, சாஹித்ய அகாடமி விருது பெற்ற எழுத்தாளர் திரு.சு.வெங்கடேசன் அவர்களின் பேச்சு தமிழ்ப்பாரம்பரியத்தின் தொன்மையை விளக்கி விழித்தெழச்செய்தது. இரவு உணவிற்குப் பின்னர் பாடகர் கார்த்திக்கின் மெல்லிசைப் பாடல்கள் மனதை மயக்க, பாடகி சக்திஸ்ரீ கோபாலனின் வித்தியாசமான குரலில் சில பாடல்களை ரசித்தோம். டிரம்ஸ் சிவமணி தன் தாளநயத்தை மேடையில் அமைக்கப்பட்டிருந்த அனைத்துத் தாள இசைக்கருவிகளிலும் தட்டி வலியுறுத்த அதனைப் பிரமித்து ரசித்த வண்ணம் அரங்கிலிருந்து வெளியேறினோம்.

இரண்டாம் நாள்... குழந்தைகளுக்கான சர்க்கஸ் மேடைக்காட்சிகளுடன் உற்சாகமாகத் துவங்கிய தினம், ஓவியர் திரு.ட்ராட்ஸ்கி மருது அய்யா மற்றும் தமிழகக் காவல்துறை ஆய்வாளர் திரு. கலியமூர்த்தி அய்யா அவர்களின் சிந்தனைமிகு பேச்சுடன் சிறப்பாகத் தொடர்ந்தது. மிசௌரி தமிழ்ச்சங்கத்தின் நிகழ்ச்சியான பொதுமறை நடனத்தில் பரதம், சதிர், கரகம், மயிலாட்டம், பறை, சிலம்பம் என அனைத்தையும் சேர்த்து திருக்குறளின் உயர்வினை உலகுக்கு எடுத்துரைத்துப் பெருமையுடன் முகமலர்ந்து சிரித்தது எங்கள் தமிழ்ச்சங்கப் பறை மற்றும் நடனக்குழு. அன்று மாலை "சங்கங்களின் சங்கமம்" என்று அழைக்கப்படும் அனைத்து சங்கங்களின் அணிவகுப்பில் பங்கேற்று மேடையேறி முழக்கமிட்டு மகிந்தோம். இரவு உணவு முடிந்து நடனமேதை நர்த்தகி நட்ராஜ் அவர்களின் பரதநாட்டிய நிகழ்ச்சியைக் கண்டுகளித்துப் பின் அனைவரும் இணைந்து புகைப்படங்கள் எடுத்து ஃபெட்னா நினைவுகளைச் சுமந்த வண்ணம் விடுதி வந்தடைந்தோம்.

மறுநாள் செயின்ட் லூயிசை நோக்கிய பயணத்தில், முன்னர் குறிப்பிட்ட விளையாட்டுகளுடன், ஒவ்வொருவரும் பேரவை விழாவைப் பற்றிய தங்களின் மேலான கருத்துகளைப் பகிர்ந்து மகிந்தோம். மிகவும் பொறுப்பாகவும் பாதுகாப்பாகவும் அனைவரையும் அழைத்துச் சென்று ஊர்திரும்பும் வரை ஒருங்கிணைத்த நண்பர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள். இந்தப் பயணத்தில் பங்குபெற்ற அனைவரின் வாழ்விலும் இந்தப்பயணம் நீங்காத நினைவுகளாக இடம்பெறும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை!!!



# இயற்கை-செயற்கை

மேகநாதன் எப்போதும் போல் காலையில் எழுந்து உடற்பயிற்சி செய்யப் போவதற்குத் தயாராகிக் கொண்டிருந்தான். அவன் பல்லாவரம் தாமரைப் பூங்காவில் உடற்பயிற்சி மற்றும் காலை ஓட்டம் செய்வது வழக்கம். அன்று கிளம்பும்போது சிறிதளவு ஒரு இனம் புரியாத அவஸ்தை இருப்பது போல் உணர்ந்தான். அவன் மனதில், அடுத்த பத்து நாட்களில் வேலை நிமித்தமாக மூன்று மாதப் பயணமாக செவ்வாய் கிரகம் செல்ல வேண்டியதை நினைத்துப் பார்த்தவுடன் வேர்த்தது. பலமுறை சென்று வந்திருந்தாலும் இந்த முறை ஒரு மனமாற்றத்தை அவனால் உணர முடிந்தது.

2022 ஆம் ஆண்டில், இந்தியா முதன் முறையாக வியோமநாட்ஸ்களை (இந்திய விண்வெளி விஞ்ஞானிகள்) விண்வெளிக்கு அனுப்பி சாதனை படைத்தது. அமெரிக்கா, ரஷ்யா மற்றும் சீன நாடுகளைக் காட்டிலும் வெகு தாமதமாக இந்தச் சாதனையைச் செய்தாலும், அதற்குப் பிறகு மிக வேகமாக முன்னேறி, இருபதே ஆண்டுகளில், செவ்வாய் கிரகத்தில் ஒரு ஆராய்ச்சி மையத்தை இந்தியா திறந்தது. இன்று ஐம்பது ஆண்டுகளுக்குப் பிறகு, நூற்றுக்கணக்கான இந்தியத் தனியார் நிறுவனங்கள் மிக சர்வ சாதாரணமாக செவ்வாய் கிரகத்தில் வணிகம் செய்கின்ற அளவிற்கு முன்னேறிவிட்டன. இதை எல்லாம் நினைத்துக் கொண்டே மேகநாதன் ஓட ஆரம்பித்தான். செவ்வாய் கிரகம் செல்லும் பயணம் எவ்வளவோ மாறி இருந்தாலும்

சென்று அடையலாம். புவி ஈர்ப்பு இல்லாமை, குறைந்த புவி ஈர்ப்பு மற்றும் நச்சுக் காற்று சரி செய்யும் கருவிகளைப் பொருத்திக்கொண்டு, பல வகையான உணவு மற்றும் தாது பொருட்களினால் உடலில் ஏற்படும் உபாதைகளை சரி செய்வதற்கு பல சாதனங்களை ரத்தத்தோடு ரத்தமாக கலந்து அவைகளின் வேலையை கண்காணிக்க ஒரு கணினியை இரண்டாவது மூளையாக காதுகளில் பொருத்திக்கொண்டு ஒரு எந்திரனாகவே மாறவேண்டும். இவ்வாறு எல்லாம் மாறப்போகும் நான் ஒரு மனிதன்தானா என்ற ஒரு கேள்விக்குறி மேகநாதனுக்கு எப்போதும் உண்டு, அதுவும் செவ்வாய் கிரகம் செல்லத் தயாராகும்போது இந்த மாதிரி சிந்தனைகள் நிறைய வரும் அவனுக்கு. அதை விட்டுவிட வேண்டும் என்று பலமுறை முயற்சி செய்து தோற்றுப் போனதுதான் மிச்சம்.

இப்படி, பல கனத்த நினைவுகளையும், எண்ணங்களையும் அசை போட்டுக் கொண்டே ஓடலானான். ஒரு சுற்று ஓடி முடிக்கும்போது தனது ஆராய்ச்சி மையத்தின் மருத்துவர் மற்றும் நண்பருமான மைத்ரேயனை சந்தித்தபோது அவர்கள் இருவரும் உரையாடத் தொடங்கினார்கள்.

**மைத்ரேயன்:** என்ன மேகா முகம் சரியில்லையே, எப்போதும் பார்க்கற செவ்வாய் புத்துணர்ச்சியை காணோமே

**மேகநாதன்:** என்னமோ தெரியல மை, ஒரே மன உளைச்சலா இருக்கு. என்னவோ பற்றி எல்லாம் யோசிக்கிறேன் கேவலம் இந்த பணத்துக்காக மனிதத்தன்மையே இழக்கிறோமே இது சரியா, நீயே சொல்லு இப்பிடி செவ்வாய் போயிட்டு வர்றதுக்காக ஒரு எந்திரனாவே மாறுகிறேனே! நான் ஒரு மனிதனா?

**மை:** நல்லா கேட்ட போ! பதில் நண்பனா சொல்லட்டுமா இல்ல மருத்துவராவா சொல்லனுமா!!

**மே:** காலங்கார்த்தாலேயேவா?

**மை:** ஹஹ்ஹா, அதாவது குரங்கிலிருந்து மனிதன் வந்தாங்கிறதை நீ ஒத்துக்கற இல்ல, அந்த மனிதத்



மூளை மட்டும் இருந்தா பத்தாது, அதோடு ஒண்ணு ரெண்டு கணினி மூளை இருந்தாதான் அவன் மனிதனாகக் கருதப்படுவான்.

**மே:** இதென்ன சப்பக்கட்டு, உயிரியல் மூலமா இயற்கையா உருவாவதுதான் மனிதத்தன்மை. ஒரு மருத்துவரான நீ இப்படி பேசலாமா?

**மை:** இதுக்குதான் நான் முன்னாடியே கேட்டேன், நண்பனா மருத்துவரான்னு, ஹஹ்ஹா இருந்தாலும் நான் சொன்னது சரிதான். இயற்கை, செயற்கை அப்படிங்கிற கருத்து உண்டாக்கியதே நாமதானே. மாற்றம் தான் முக்கியம், அதை யாராலயும் நிறுத்த முடியாது. நேற்றைய செயற்கை, இன்றைய இயற்கை, அதேமாதிரி இன்றைய செயற்கை நாளைய இயற்கை.



ரமேஷ்பாபு
நாகராஜன்

**மே:** ஹ்ம்ம், சரி அப்ப இன்னிக்கி உடற்பயிற்சியை விட்டுட்டு உன்கிட்ட மனப்பயிற்சி எடுத்துக்க வேண்டியதுதான் ஆக மொத்தம் எங் கிட்ட என்ன பிரச்சனைன்னு நீ நினைக்கிற?

**மை:** உனக்கு மனப்பிரச்னை இருக்குன்னு சொல்லும்போதே, உனக்கு மனிதத்தன்மை இருக்குன்னு தெரியுது, அப்பறம் என்ன குழப்பம். உன்னோட மனப்பிரச்னைக்கு சுலபமான தீர்வு காலத்தினால் அழியாத பகவத்கீதையில இருக்கு.

**"தஸ்மாதசக்த ஸததம் கார்யம் கர்மா ஸமாசர**
**அஸக்தோ ஹயாசரன்க்ரம பரமாப்னோதி பூருஷ"**

பலனை எதிர்பார்க்காமல், எந்த ஒரு பற்றும் இல்லாம வேலையை செய்பவன் கர்ம யோகி ஆவான். எதைபத்தியும் கவலைப்படாம உன் ஆராய்ச்சியை கவனி, இந்த குழப்பம் எல்லாம் ஓடிப்போய்விடும்.

**மே:** இன்னும் கொஞ்ச நேரம் உன்கிட்ட பேசிக்கிட்டு இருந்தேன்னா பேசாம சன்யாசியா மாறிடுன்னு சொன்னாலும் சொல்வ. எனக்கு நேரமாச்சு, நான் கிளம்பறேன்.

நகைச்சுவைக்காகப் பேசிவிட்டு கிளம்பினாலும், மேகநாதன் ஒரு புத்துணர்ச்சி பெற்றவனாக, குழப்பம் நீங்கியவனாக மனசுக்குள் மைத்ரேயனுக்கு நன்றி சொல்லியவாறே வீடு திருப்பினான். ●

# குறுக்கெழுத்து போட்டி

ஸ்ரீபாலாஜி ராஜமாடசாமி

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச் | ஏ | க் | க் | இ | ஙெ | ங் | பொ | ஓ | உ | ன் | க் | ழ் | ன் | மு |
| ட் | க் | சொ | ல | நீ | ர் | ஊ | ந் | ந் | ம் | கா | ளை | த் | ஓ | ஊ |
| டு | வி | தை | க் | க | டி | ண் | வ | டு | ட் | மா | ட் | க | ல் | ம் |
| நெ | டு | கொ | இ | சி | ய் | த் | உ | க் | னெ | ல் | ழ் | நெ | க | ந |
| த் | வா | ஏ | ரி | த் | யொ | ந் | ம் | ழி | ந் | ம் | த் | ம் | கி | ந |
| வ | ஆ | அ | கூ | பா | மொ | ர் | ப் | ர | ல் | ச் | ல் | ண் | ணொ | ஓ |
| ர | நீ | ஓ | டு | மு | ள் | ண் | யி | அ | உ | உ | ங் | க | ங் | ம் |
| ஓ | ஏ | ர் | ர் | க் | மா | ல் | ய் | ப | ஓ | ங் | ம் | ப் | ங் | கா |
| ற் | ய | ஃ | ப் | ஃ | க் | மொ | கோ | ழி | வொ | ப் | வோ | ப | இ | பொ |
| க | ழ் | ன் | னி | பா | சு | கு | ன் | க் | இ | ஏ | சு | ஈ | ஈ | ல் |
| ன் | ய | ரி | சூ | ஜூ | ச | இ | ஃ | த் | வை | ம் | ந் | ர் | ஃ | கா |
| ச் | பி | வி | த் | டெ | னொ | ன | ன | ணோ | பு | ந் | ல் | வ | ப் | க் |
| அ | று | வ | டை | பா | வ | ப் | ம் | ல் | க் | ந் | நோ | ழ | ப் | ய் |
| டு | றோ | ந் | க | ச் | ன் | ந் | ய் | ய | த | ம் | | உ | க் | வா |
| ஏ | இ | ஈ | சு | ப | ஊ | ஏ | ற் | வ | ஈ | ண் | ண் | ஆ | இ | ஈ |



1. ஏர்
2. உழவர்
3. பசும்புல்
4. பசு
5. வயல்
6. கோழி
7. நெல்
8. நீர்
9. சூரியன்
10. பயர்
11. வைக்கோல்
12. விதை
13. வாய்க்கால்
14. காளை
15 மாட்டு வண்டி
16. நீர்ப்பாசனம்
17. உரம்
18. அரிசி
19. அறுவடை
20. பொங்கல்

# சித்திரம் பேசுதடி



ஆடோன் ஜெய்ரஸ்




அக்ஷயா பூபதி



அனிருத் வெங்கடராமன்



அர்ச்சிதா ஆனந்த்



அவந்திகா சுயம்பிரகாஷ்




பெலிசியா இராபர்ட் ராஜகுமார்

# -நிலை 2,3 மாணவர்கள்




ஜேசு ஸ்டீவ்



கனிஷ்கா வினோமனோகரன்



வித்யுத் காமேஷ்



கிருத்யா கருணாகரன்





மதுஷினி சதிஷ்குமார்



நரேந்திரா ரமேஷ்பாபு




நேஹா ஸ்ரீராம்



சஹானா பரதன்



சம்யுக்தா ரங்கராஜன்



சஞ்சிதா ராஜகோபால்



ஷக்தி மணிகண்டன்



ஷிவானி முருகன்



ஸ்ரீசிவானி மணிகண்டன்



ஸ்ரீநிதி சிக்கல் குமார்



தனுஜா மணிகண்டன்



நிதீஷ்குமார் விஜயகுமார்

# குறுக்கெழுத்து போட்டி - விடைகள்

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| ச் | ஏ | க் | க் | இ | ஙெ | ங் | பொ | ஓ | உ | ன் | க் | ழ் | ன் | மு |
| ட் | க் | சொ | ல | நீ | ர் | ஊ | ந் | ந் | ம் | கா | ளை | த் | ஓ | ஊ |
| டு | வி | தை | க் | கூ | டி | ண் | வ | டு | ட் | மா | ட் | கூ | ல் | ம் |
| நெ | டு | கொ | இ | சி | ய் | த் | உ | க் | னை | ல் | ழ் | நெ | க | ந |
| த் | வா | ஏ | ரி | த் | யொ | ந் | ம் | ழி | ந் | ம் | த் | ம | கி | ந |
| வ | ஆ | அ | கூ | பா | மொ | ர் | ப் | ர | ல் | ச் | ல் | ண் | ணொ | ஓ |
| ர | நீ | ஓ | டு | மு | ள் | ண் | யி | அ | உ | உ | ங் | க | ங் | ம் |
| ஓ | ஏ | ர் | ர் | க் | மா | ல் | ய் | ப | ஓ | ங் | ம் | ப் | ங் | கா |
| ற் | ய | ஃ | ப் | ஃ | க் | மொ | கோ | ழி | வொ | ப் | வோ | ப | இ | பொ |
| ஃ | ழ் | ன் | ணி | பா | ஃ | கு | ன் | க் | இ | ஏ | கு | ஈ | ஈ | ல் |
| ன் | ய | ரி | கூ | ஜா | ச | இ | ஃ | த் | வை | ம் | ந் | ர் | ஃ | கா |
| ச் | பி | வி | த் | டெ | னொ | ன | ன | ணோ | பு | ந் | ல் | வ | ப் | க் |
| அ | று | வ | டை | பா | வ | ப் | ம் | ல் | க | ந் | நோ | ழ | ப் | ய் |
| டு | றோ | ந் | க | ச் | ன் | ந் | ய் | ய | த | ம் | | உ | க் | வா |
| ஏ | இ | ஈ | கூ | ப | ஊ | ஏ | ற் | வ | ஈ | ண் | ண் | ஆ | இ | ஈ |



# என் பயண அனுபவம்

என் மகள்கள் இருவரும் இங்கு தான் அமெரிக்காவில் உள்ளனர். இதுநாள் வரை நானும் என் கணவரும், இரு வருடங்கட்கு ஒரு முறை இங்கு வந்து அவர்களுடன் சில மாதங்கள் இருந்து விட்டுச் செல்வோம். அப்படித்தான் 2005-ஆம் ஆண்டு இளைய மகள் வசிக்கும் செயின்ட் லூயிஸ் நகருக்கு வந்திருந்தோம்.

என் மாமாவின் குடும்பம் கனெக்டிகட்டில் இருந்ததால், அவர்களைப் பார்க்கச் சென்றோம். சில நாட்கள் அவர்களுடன் இருந்து விட்டு செயின்ட் லூயிஸிற்கு திரும்பப் புறப்பட்டோம்.

இங்கிருந்து தான் என்னுடைய இந்த மறக்க முடியாத பயண அனுபவக் கட்டுரை துவங்குகிறது. இது மற்ற பயணக் கட்டுரைகள் போல் அல்ல. இதிலிருந்து நீங்கள் எதாவது தெரிந்து கொள்ளலாம் என்று நினைத்தால் அதற்கு நான் பொறுப்பு அல்ல.

சரி, விட்ட இடத்திலிருந்து தொடங்குவோம். விமானம் செயின்ட் லூயிஸை நெருங்கிக் கொண்டிருந்தது. திடீரென்று கழிப்பறைக்குச் சென்ற பயணி ஒருவர், கழிப்பறை அடைப்பினால் துர்நாற்றம் வீசுகிறது என்றார். ஒவ்வொருவரும் கழிப்பறைக்குச் சென்று பார்த்துவிட்டு வந்து கொண்டிருந்தார்கள். விமானப் பணியாளர்களுக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. இதற்கிடையில் விமான ஓட்டி ஓர் அறிவிப்பு செய்தார். செயின்ட் லூயிசில் பலத்தக் காற்றுடன் மழை பெய்வதால், விமானம் தரை இறங்க அனுமதி கிடைக்கவில்லை என்றும், அருகில் உள்ள வேறொரு விமான நிலையத்தில் தரையிறங்கப் போவதாகக் கூறினார். அவ்வளவு தான். விமானத்தில் ஒரே சல சலப்பு. எங்களுக்கும் என்ன செய்வதென்று புரியவில்லை. எங்கள் கையில் அப்போது கைப்பேசியெல்லாம் இல்லை. எப்படி மகளுக்கும், மாப்பிள்ளைக்கும் தகவல் சொல்வது என்று தெரியாமல் தவித்துக் கொண்டிருந்தோம். இதற்கிடையில் விமானம், கேப் ஜிராடோ என்ற விமான நிலையத்தில் தரை இறங்கியது. அது ஒரு சிறிய விமான நிலையம். அங்கே அதிக விமானப் போக்குவரத்தும் கிடையாதாம். வேறு வழியின்றி விமானம் அவசரமாக அங்கே தரை இறங்கப்பட்டது. இயற்கையின் உந்துதலால் அவதியுற்ற பயணிகள் விமான நிலையத்தின் உள் செல்ல வேண்டும் என்று கேட்க ஆரம்பித்தனர். பயணிகள் கீழே இறங்க அனுமதி இல்லை என விமானப் பணியாளர்கள் சட்டம் பேசிக் கொண்டிருந்தனர்.

ஒவ்வொருவரும் அவரவர் வீட்டிற்கு கைபேசியில் தொடர்பு கொண்டு விவரம் சொல்லிக் கொண்டிருந்தனர். நாங்கள் இருவரும் பேசுபவர்களை பரிதாபமாகப் பார்த்துக் கொண்டிருந்தோம். எங்களின் ஏக்கப் பார்வையை புரிந்து கொண்ட ஒரு அமெரிக்கர் தன் கைப்பேசியை எங்களிடம் கொடுத்து வீட்டிற்கு பேசுங்கள் என்றார். அதைப் பயன்படுத்த தெரியாத காரணத்தால், எங்கள் மகளின் எண்ணை கொடுக்க, (நல்ல வேளையாக ஒரு குறிப்பேட்டில் மகளின் எண்ணை எழுதி வைத்திருந்தோம்!) அவரும் தொடர்பு பெற்றுத் தந்தார். ஏதோ தெரியாத எண் என்று விட்டு விடாமல், நல்ல வேளையாக என் மகள் கைப்பேசியை எடுத்துப் பேசினாள். அவசர அவசரமாக விவரத்தைக் கூறினோம். என் மகளும், 'தைரியமாக இருங்கள். விமானம் கிளம்புவது பற்றி ஏதேனும் தெரிந்தால் கூறுங்கள். விமான நிலையத்தில் உங்களை அழைத்து வர சென்றுள்ள மாப்பிள்ளையிடம் சொல்கிறேன்'



திருமதி ஹேமலதா தேவ்குமார்

என்றாள். அடுத்தவர் கைப்பேசியில் அதிக நேரம் பேசவும் தயக்கம். சமயம் அறிந்து உதவி செய்த அந்த அமெரிக்கருக்கு பலப் பல நன்றிகள் கூறினோம்.

நாங்கள் பயணித்த அந்த விமானம் ஒரு சிறிய விமானம் தான். விமானத்தினுள் பயணிகளுக்கும் விமானப் பணியாளர்களுக்கும் வாக்குவாதம் வலுக்க, வேறு வழியின்றி விமான நிலைய அதிகாரிகளைத் தொடர்பு கொண்டு, விமான நிலையக் கழிப்பறையை உபயோகிக்க அனுமதி கேட்டனர். பாதுகாப்பு காரணங்கள் கருதி பயணிகள் இறங்க அனுமதி இல்லை என அதிகாரிகள் கூற, பயணிகள் பொறுமை இழந்து விமானத்தினுள் எழுந்து நின்று கத்தத் தொடங்கினர். வெளியில் பெய்த மழையின் சத்தத்தை விட இவர்களின் சத்தம் அதிகம் ஆகியது. புதிய இடம், புதிய சூழ்நிலை, புதிய அனுபவம் என நாங்கள் செய்வதறியாது திகைத்துக் கொண்டிருந்தோம். பயணிகளின் துன்பத்தை ஒரு வழியாகப் புரிந்து கொண்ட அதிகாரிகள் அனுமதி அளித்தனர். எப்படித் தெரியுமா? துப்பாக்கி ஏந்திய காவலர்கள் உடன் கண்காணித்து வர, ஒவ்வொருவராக கழிப்பறைக்குச் சென்று வந்தோம் - பிணைக் கைதிகளைப்போல.

இதற்கிடையில், என் மகள், நாங்கள் தொடர்பு கொண்ட எண்ணை நினைவு கூர்ந்து எங்களை அழைத்துப் பேசினாள். விமானத்தில் சிறிது நேரம் அமைதி நிலவியது. ஒரு வழியாக மழையும் காற்றும் குறைந்த காரணத்தாலும் செயின்ட் லூயிசில் தரை இறங்க அனுமதி கிடைத்து விட்டதாலும், விமானம் புறப்பட தயாராகியது. "அப்பாடா" என நிம்மதிப் பெருமூச்சு விட்டோம். விமானம் கிளம்பி ஓடு பாதை வரை மெல்ல சென்றது. மீண்டும் ஒரு அதிர்ச்சி சம்பவம் அரங்கேறத் தொடங்கியது. விமானம் ஓடு பாதையிலிருந்து திரும்பி மீண்டும் விமான நிலையத்திற்கே வந்தது. எங்கள் திகைப்பு அடங்கு முன், விமான ஓட்டியின் முன்புறம் உள்ள கண்ணாடியில் ஓர் விரிசல் ஏற்பட்டு விட்டதால் விமானம் இனி பறக்க இயலாது என்ற விமானியின் அறிவிப்பு அனைவரையும் தாக்கியது.

எங்கள் சப்த நாடியும் அடங்கிவிட, குழப்பத்தின் உச்சியியை அடைந்தோம்! பின்னர், விமானத்திலிருந்து நாங்களும் பொருட்களும் இறக்கப்பட்டோம். நாளை வரை காத்திருங்கள் எனக் கூறி விட்டு விமானிகள் மாயமாய் மறைந்து விட்டனர். விமான நிலையமோ சிறியது. நேரமும் இரவு ஏழு மணியை நெருங்கிக் கொண்டிருந்தது. அங்கே இருந்த இரு பணியாளர்களும் நிலைமையை சமாளிக்க இயலாமல் திணறிக் கொண்டிருந்தனர். பயணிகள் மெல்ல மெல்ல அவரவர் வழியில், குழுக்களாகவும், தனித்தும் விமான நிலையத்திலிருந்து வெளியேறத் தொடங்கினர். நாங்கள், அமெரிக்க கைபேசி நண்பரை மீண்டும் நாடி, மகளிடம் தொடர்பு கொண்டு தகவல் கூறினோம்.

எங்கள் மகள், " பயப்படாதீர்கள், விமான நிலையத்தை விட்டு வெளியே வராதீர்கள். நாங்கள் வந்து அழைத்துக் கொள்கிறோம்" என்றாள். உடன் வந்த பயணிகள் எல்லோரும் சென்று விட, வெறிச்சோடிய விமான நிலையத்தில் நாங்கள் மட்டும் தனித்திருந்தோம். ஒரு நீண்ட தவிப்போடு காத்திருந்தோம். இரவு ஒரு மணி அளவில், இட்லி சட்னியுடன் எங்களை வரவேற்க வந்த மகளையும் மாப்பிள்ளையையும் பார்த்த பின் ஒரு நீண்ட ஆயாசப் பெருமூச்சு விட்டோம்.

ஆஹா.. அந்த நேரத்தில் இட்லி, சட்னி அமிர்தமாக இருந்தது. சாப்பிட்டுவிட்டு, காரிலியே கண்ணயர்ந்தோம். விடியற்காலை மூன்று மணி அளவில் செயின்ட் லூயிஸ் வந்து சேர்ந்தோம்.

அப்போது பயத்தை அளித்த அந்தப் பயண அனுபவம் இன்று கட்டுரையாக உங்கள் முன் மலர்ந்துள்ளது.

# தரு

ரம்யா ஜானகிராம்




சின்னஞ்சிறு விதையில் தோன்றி
அழுக்கு பூமியிலே உழன்று
மிதித்தாலும் முளைத்தெழுந்து
நச்சை எங்கள் மூச்சுக்காற்றாய் மாற்றி
பல்லுயிரின் அமுதசுரபியாய்
புள்ளினத்தின் புகலிடமாய்
விலங்குகளின் விளையாட்டரங்காய்
சுடும்வெயிலில் குடையாய்
கடும்பனியில் கூட்டின் காவலனாய்
இறுதியிலும் விறகானாய்
தன்னலமற்ற தருவே!
இறைவனின் மிகச்சிறந்த படைப்பே!
இனியொரு பிறவி இருந்தால்,
உன்னைப் போல்
உன்னத வாழ்க்கை வேண்டுகிறேன்!

பின்குறிப்பு: மரம் மனிதனுக்கு மட்டுமில்லாமல் எல்லா உயிரினங்களுக்கும் வாழ்வாதாரமாக எல்லா வளங்களையும் "தரு"கிறது. இதை உணர்த்தும் வகையில் தான் நம் பள்ளிக் குழந்தைகள் "தாத்தா மரம்" என்ற நாடகத்தை நிகழ்த்தினார்கள். அனுபவம் முதிர்ந்த பெரியவரால் நமக்கு எவ்வளவு பயனோ, அதுபோல தான் 50 வருடங்களையும் தாண்டி வாழும் மேப்பில் (Maple) போன்ற மரங்களால். மக்கள்தொகை பெருக்கத்தால் இன்று மரங்கள் பல வெட்டப்படுகின்றன. இது தவிர்க்க முடியாதது தான். ஆனால் ஒரு மரத்தை அழித்தால் பல உயிரினங்களும் நேரடியாக பாதிக்கப்படுகின்றன என்பதை உணர்ந்து, நம்மால் இயன்றவரை மரங்களை நட்டு வளர்க்க வேண்டும்.





# டாக்டர் மு.வ. அவர்கள் எழுதிய ஒரு கட்டுரையின் சிறு பகுதி.



தொகுப்பு: கோ.தேவ்குமார்

படித்ததில் பிடித்தது

( நன்றி: தமிழ்ப் பண்பாட்டுக் கையேடு - தமிழின எதிர்கால வழி காட்டி )

*A Publication of International Tamil Language Foundation )*

அற வழி. அறம் என்பது யாது? செயலா? சொல்லா? எண்ணமா? மூன்றுமே விடை ஆகும். செயலுக்கும் சொல்லுக்கும் எண்ணமே அடிப்படை. எண்ணத்தின் தூய்மையே முதன்மையானது. ஆகையால் மனத்தில் மாசு இல்லாத தன்மை பெற வேண்டும். அதுவே அறம். மன மாசு நீங்காமல் செய்யும் செயலும், சொல்லும் வீண் ஆரவாரமானவை. இவை அறம் அல்ல.

பொறாமை, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்ற நான்கையும் கடந்து நடப்பது அறமாகும்; அறம் செய்வதில் தயக்கமோ காலம் தாழ்த்தலோ, ஒத்தி வைத்தலோ கூடாது. "இப்போது இளமைப் பருவம், ஆகையால் அறத்தைப் பற்றிக் கவலை வேண்டாம், பிறகு பார்த்துக் கொள்ளலாம்" எனப் புறக்கணிக்கக்கூடாது. இளமை முதலே அறம் செய்ய வேண்டும். அவ்வாறு செய்யும் அறமே, அழிவு வருங்காலத்தில் அழியாத் துணையாக நின்று காக்கும்.

வாழ்க்கையில் அறியாமை காரணமாகக் கொள்ளப்படும் உயர்வு தாழ்வுகளை வைத்து அறத்தை அளந்தறியக்கூடாது. அகத்தே எண்ணும் எண்ணங்களின் தூய்மையாலும் நெஞ்சின் இன்ப துன்ப உணர்வுகளாலும் அறத்தை அறியக்கூடுமே அல்லாமல், புறத்தே உள்ள உயர்வு தாழ்வுகளால் அறிய முடியாது. அறம் செய்யாத காரணத்தால் ஒருவன் பல்லக்கைச் சுமக்கிறான் என்றும், அறம் செய்த காரணத்தால் மற்றவன் பல்லக்கின் உள்ளே அமர்ந்து சுகமாகச் செல்கிறான் என்றும் அறத்தின் பயனை அளந்து கூற வேண்டாம். இன்ப துன்ப உணர்வுகளை மனது அறிய முடியுமே அல்லாமல் இத்தகைய வேறுபாடுகளால் அறிய முடியாது. அரியணை மேலிருந்து அழுது கலங்குவோரும் உண்டு; எளியவாழ்வில் அமைதியாக இன்புறுவோரும் உண்டு; ஆகவே, அறியாமல் புறத்தோற்றத்தைக் கண்டு அறத்தின் பயனை அளந்தறியக் கூடாது.

அறம் ஒன்றே மனச் சான்றை மகிழ்விக்கும்; அந்த மனச் சான்றின் மகிழ்ச்சியே உண்மையான இன்பமாகும். மனச் சான்று ஒருவனைச் சுடும் போதும், குற்றம் சாட்டும் போதும், எள்ளி நகையாடும் போதும், ஒருவன் கண்ணுக்கும் செவிக்கும் மூக்கிற்கும் நாக்கிற்கும் உடம்பிற்கும் இன்பமாக என்னென்ன தேடித் தரினும் அவை இன்பம் நல்கா; அவற்றால் மனம் அமைதியுறாமல் மேன்மேலும் அலைந்து வருந்திக் கொண்டே இருக்கும். ஆகையால் அறத்தால் வருவதே உண்மையான இன்பமாகும். மற்றவை எல்லாம் போலி இன்பமாகும்; புகழும் இல்லாதவையாகும். அதனால் ஒருவன் வாழ்நாளில் செய்யத் தக்கது அறமே;

**மனத்துக்கண் மாசுஇலன் ஆதல் அனைத்துஅறன்**
**ஆகுல நீர பிற** [குறள் 34]

**அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்**
**இழுக்கா இயன்றது அறம்.** [குறள் 35]

**அன்றுஅறிவாம் என்னாது அறம்செய்க மற்றது**
**பொன்றுங்கால் பொன்றாத்துணை.** [குறள் 36]

**அறத்துஆறு இதுஎன வேண்டா சிவிகை**
**பொறுத்தானோடு ஊர்ந்தான் இடை** [குறள் 37]

**அறத்தான் வருவதே இன்பம் மற்றுஎல்லாம்**
**புறத்த புகழும் இல.** [குறள் 39]



# விழித்திடு தமிழகமே...

முனைவர்.
ராஜகோபால் கருப்புசாமி



செந்தமிழ் நாடெனும் போதினிலே
இன்பத்தேன் வந்து பாயுது காதினிலே
என்றிருந்த காலம் கடந்த காலம் ஆகிவிட்டது
ஏனென்று கேளுங்கள்!! எதற்கு என்று கேளுங்கள்!!!

சங்கம் வைத்து வளர்த்த தமிழ் நாட்டில்
சத்தமாகப் பேசுவதற்கு இல்லை தமிழில்
சிறிய வாய்ப்பு கட்டினாலும்
சுத்தமாக பேசமுடியவில்லை தமிழனால்
என்னென்று கேளுங்கள்!! ஏனென்று கேளுங்கள்!!!


ஒருபுறம் இயற்கை சீற்றம்
கஜா என்ற பெயரில்
தாத்தன் பாட்டன் காலத்து
தழைத்து நின்ற இயற்கையை
நாசமாக்கியது கஜா புயல்
மோசமானது தமிழனின் வாழ்க்கை
மறுபுறம் இயற்கை மாற்றம்
ஸ்டெர்லைட் என்ற தொழிலால்


இயற்கை அழிவை காப்பாற்ற
போராடியவர்கள் பலர்
இன்றுவரை காணவில்லை ஏனென்று கேட்க
இயலவில்லை இந்த தமிழினத்திற்கு
ஆயிரம் காலத்து பாரம்பரியமான
மஞ்சுவிரட்டு எனும் ஜல்லிக்கட்டை
லட்சம் பேர் போராடி மீட்டது
இந்த செந்தமிழ் நாட்டில் தான்

தமிழ் வழிக்கல்வி மூலம்
தலைசிறந்த மருத்துவர்கள் பல
தமிழகத்தில் உருவாக்கிய சிறப்பு இருக்க
தவிர்க்க முடியவில்லை நீட் தேர்வு முறை

ஆட்சிப் பொறுப்பில் ஒரு கட்சி
ஆட்சி செய்வது மறு கட்சி
ஆனால் இரண்டுமே ஒன்றுதான் – எப்படி
விடையில்லா விடுகதைக்கு
விடை தேடுகிறது இந்த தமிழகம்
விலை போன ஓட்டுக்களால்

வீரமான தமிழினமே விழித்தெழு
நம் நாட்டிற்கு தேவை
தமிழ் புரட்சி
அரசியல் புரட்சி
இயற்கை புரட்சி
விழித்திடு தமிழகமே விழித்திடு....









# தமிழ்ப்பள்ளி ஆசிரியர்களுடன் ஒரு நேர்முகம்

நம் தமிழ்ப்பள்ளி பல்லாண்டுகளாக வெற்றிகரமாக நடந்து வர முக்கியக் காரணம், தமிழ்ப்பற்று மிக்கத் தன்னார்வலர்களின் கடும் உழைப்பேயன்றி வேறில்லை. நம் பள்ளிகளின் தரம் மேலும் உயர்வதற்கான கருத்துக்களை அறியும் பொருட்டு, அவர்களில் சிலரை, பால்வின் கிளைக்காக செல்வி. அனன்யா செந்தில்நாதன், செல்வன். ஆதி ஸ்ரீதர், செல்வன். பிருத்வி தனபால் மற்றும் ஓ'ஃபாலன் கிளைக்காக திருமதி. பிரியா ஞானசிவம் அவர்களும் கேட்டு கீழ்கண்ட கட்டுரையாகத் தொகுத்துத் தந்துள்ளார்கள்.

### திருமதி. பாரதி ராஜு



தமிழ்ப்பள்ளி ஆசிரியர், நிலை - 2

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 12 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது :அனைத்துஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் ஈடுபாடு.

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத் திற்கான என் கருத்து : பாடத்திட்டத்தை மேலும் சீரமைத்தல்

### திருமதி. மீனாட்சி கணபதி



தமிழ்ப்பள்ளி ஆசிரியர், நிலை - 3

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 10 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது : இங்கு இருக்கும் தன்னார்வலர்களின் தமிழ்ப்பற்று.

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து : தமிழ்ப்பள்ளி நன்றாக முன்னேறிக் கொண்டிருக்கிறது. பெற்றோர்களின் உதவியோடு மாணவர்கள் வீட்டில் தமிழ் பேசிப் பழகினால், நம் பள்ளி மேலும் சிறப்பாக முன்னேறும்.

### திருமதி. திவ்யா பாலா



தமிழ்ப்பள்ளி ஆசிரியர், நிலை - 4

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 6 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது : மாணவர்களுக்கு தமிழ் கற்பித்தல்

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: பாடத்திட்டத்தில் சற்று இலக்கணங்களை குறைத்து பேச்சுத் தமிழை இணைத்தால் இன்னும் சிறப்பாக இருக்கும்

### திருமதி. ஆனந்தி ஜெயராமன்

தமிழ்ப்பள்ளி ஆசிரியர், நிலை - 1



தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 4 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது : மாணவர்களுடன் நேரம் செலவழித்தல்

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: பாடப்புத்தகங்களை சரியான நேரத்தில் வழங்க முயற்சிப்பது. மழலையர்களை வீட்டுக்கு அனுப்பும் முறையைச் சற்று சீரமைக்கலாம்

### திருமதி. சுமதி விஜய்



தமிழ்ப்பள்ளி ஆசிரியர், மழலை

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 5 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது : மாணவர்கள் பேசுகிற மழலைச் சொற்கள் இனிமையாக இருக்கின்றன.

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: மாணவர்கள் நடைமுறைத் தமிழில் இன்னும் கொஞ்சம் பேசினால் நன்றாக இருக்கும்.



### திரு. மஞ்சுநாதன் வெங்கடராமன்

தமிழ்ப்பள்ளி ஆசிரியர், நிலை - 1

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 3 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது : ஆசிரியர்கள் நிறைய உழைக்கிறார்கள்

### திருமதி. சுஜாதா பெருமாள்



தமிழ்ப்பள்ளி ஆசிரியர் , நிலை - மழலை

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 5 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது: தமிழ்ப்பள்ளியில் நம் ஊரில் மறந்து போன கலாச்சார விளையாட்டுக்களையும், அருமையான தமிழையும் கற்றுக்கொள்கிறார்கள்

### திரு. சண்முகம் சுப்பையா



தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி: 9 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது: தமிழ்ப்பள்ளி அனைவரும் தமிழ் கற்க உதவுகிறது

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: வகுப்பின் நேரத்தை அதிகமாக்கலாம்.




## செல்வன். சத்யா சிவசங்கர்



தமிழ்ப்பள்ளி துணை ஆசிரியர், நிலை - 6

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 4 வருடங்கள்தமிழ்ப்பள்ளியில் பிடித்தது மாண வர்கள் தமிழ் கலாச்சாரம் சார்ந்த விஷயங்களைத் தம் தாய்மொழி மூலம் கற்பது.

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: இளநிலை மாணவர்களை முது நிலை மாணவர்களின் உதவியோடு பயிற்று விப்பது. உதாரணமாக, முதுநிலை மாணவர்கள் தமிழ் விளையாட்டுக்கள் நடத்தலாம்.

## செல்வன். சர்வேஷ் பழனியப்பன்



தமிழ்ப்பள்ளி துணை ஆசிரியர், நிலை - 6

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 2 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது : ஒவ்வொரு மாணவருடனும் பழகி, அவர்களுக்கு தமிழில் எழுத, படிக்க மற்றும் பேச உதவுவது

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: மாணவரின் கற்பனைத்திறனைப் பயன்படுத்தி, தன் குடும்பத்துடன் தமிழில் உரையாடும் வகையில் வீட்டுப்பாடங்கள் அமைத்தால் நன்றாக இருக்கும். தமிழை பயிற்றுவிக்க விளையாட்டுக்கள் அமைக்கலாம். அவர்களை தற்போதைய செய்திகளைப் பற்றி பேசச் சொல்லலாம்

## திருமதி. பிச்சம்மாள் வேலாயுதம்



தமிழ்ப்பள்ளி ஆசிரியர், நிலை - 4

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 4 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது: எனது தமிழார்வத்தை மேன்மேலும் வளர்க்கும் அற்புத நிலையமான தமிழ்ப்பள்ளியில், தாய்த்தமிழைப் பயில வரும் குழந்தைகளில் துவங்கி, தமிழார்வம் மிக்க ஆசிரியர்கள், தன்னார்வலர்கள், தமிழுக்கானத் தனிப்பட்ட நேரம் என அனைத்தும் எனக்குப் பிடித்தவைகளே.

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: வீட்டில் குழந்தைகள் தமிழில் பேச வலியுறுத்துவது அவர்களின் தமிழ்க் கல்விக்குத் துணை நிற்கும். மாதம் ஒருமுறை நிலை ஐந்து மற்றும் அதற்கு மேற்பட்ட குழந்தைகளிடம் தலைப்புகள் கொடுத்துப் பேச வாய்ப்பளித்தல் அவர்களது தமிழார்வத்தைத் தூண்டும்.

## திரு. சங்கரநாராயணன்



தமிழ்ப்பள்ளி ஆசிரியர் , நிலை - 2

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 3 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது: தமிழ்ப்பள்ளியில் நடக்கும் தமிழ் தேனீப் போட்டிகள், எளிமையான பாடத்திட்டம்.

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: முடிந்தால் பள்ளி நேரத்தைக் காலையில் வைக்கலாம். தமிழ் மொழிக்கும், தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் பெருமை சேர்த்தவர்களைப் பற்றி வகுப்புகளில் கலந்துரையாடல்களைச் செய்யலாம்.

## திருமதி. சரண்யா கண்ணன்



தமிழ்ப்பள்ளி ஆசிரியர் , நிலை - 3

தமிழ்ப்பள்ளி தன்னார்வலர் பணி : 3 வருடங்கள்

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது : நான் விரும்பிய ஆசிரியர் பணியை அமெரிக்காவில் தொடர வாய்ப்பளித்த தமிழ்ப்பள்ளிக்கு நன்றிகள் பல. நமது தமிழ்ப்பள்ளி இவ்வளவு பெருமையையும், மேன்மையையும் பெற்றது அதன் தன்னார்வலர்களால்தான்.

தமிழ்ப்பள்ளியின் முன்னேற்றத்திற்கான என் கருத்து: மாணவர்களின் வருகைப் பதிவை அதிகரிப்பதன் மூலம் நம் பள்ளி மேலும் சிறப்பு பெறும்.

## திரு. செந்தில் இராதாகிருஷ்ணன்.



தலைவர், தமிழ்ப்பள்ளி

உரையாடியவர்: செல்வி. மிரா இராமகிருஷ்ணன், நிலை 8

நீங்கள் பணியாற்றியதில் மகிழ்ச்சியான வேலை: இருபது ஆண்டுகளுக்கு முன்பு மதுரை ஆப்டெக் கணிப்பொறி நிறுவனத்தில் கணினி ஆசிரியர் மற்றும் கல்வித்துறை தலைவராக பணியாற்றியது.

மிகவும் பிடித்த பணி: தமிழ்ப்பள்ளி தன்னார்வலராக பணியாற்றுவது.

தமிழ்ப்பள்ளியில் பிடித்தது: பல தன்னார்வலர்களின் தமிழ் ஆர்வம், தமிழ்ப்பள்ளியின் வளர்ச்சி, பெற்றோர்களின் முழு ஆதரவு, மாணவர்களின் ஆர்வம்.

தமிழ்ப்பள்ளி முன்னேற்றத்திற்கான என் கருத்து: பாடத்திட்டத்தில் சற்று இலக்கணங்களை குறைத்து பேச்சு தமிழுக்கான முக்கியத்துவத்தை அதிகப்படுத்துதல், பள்ளிக்கான நிரந்தரமான வகுப்பறைகள்.

# மிசௌரி தமிழ்ப்பள்ளி தன்னார்வலர்கள் குழு

**இதழ் ஆசிரியர்**

முனைவர். ரம்யா ஜானகிராம்

**செயற்குழு நிர்வாகிகள்:**

**தலைவர்:**

திரு.செந்தில் ராதாகிருஷ்ணன்

**முதல்வர்– பால்வின் கிளை:**

திருமதி. பிரியா ஸ்ரீதர்

**முதல்வர்– ஓ'ஃபாலன் கிளை:**

திரு. சிவசங்கர் சங்கரநாராயணன்

**துணை முதல்வர்கள் – பால்வின் கிளை:**

முனைவர். நாராயணன் நாராயணன்

முனைவர். ஜோதிலிங்கம் சிவபாக்கியம்

**துணை முதல்வர்கள் ஓ'ஃபாலன் கிளை:**

திருமதி. நவஜோதி நமச்சிவாயம்

திருமதி. பிரியா ஞானசிவம்

**வளர்ச்சிப்பணி இயக்குனர்:**

திரு. இளங்கோ திருப்பதி

**செயலாளர்:**

திரு. தனபால் இராதாகிருஷ்ணன்

**இணை செயலாளர்:**

திரு. ராஜா கிருஷ்ணசாமி

**பொருளாளர்:**

திரு. நந்தகுமார் ஹரிதாஸ்

**தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர்:**

முனைவர். ரம்யா ஜானகிராம்

**இணைய ஒருங்கிணைப்பாளர்:**

திருமதி. சரண்யா கண்ணன்

**தன்னார்வலர்கள் உதவிக்குழு:**

திரு. தர்மராஜன் ராமசாமி

திரு. டில்லிபாபு ஆறுமுகநாயக்கர் கணேசன்

திரு. சண்முகம் சுப்பையா

முனைவர். ராஜகோபால் கருப்புசாமி

திருமதி. ரம்யா சங்கர்

திரு. சரவணன் பழனிவேல்

திரு. ராஜாமடசாமி குமாரவேல்

திரு. ராம்கி சோமசுந்தரம்

திரு. பூபதி சாமிகண்ணு

திரு. கமலக்கண்ணன் சிவசங்கரன்

**குறுஞ்சுற்றுலா ஒருங்கிணைப்பாளர்:**

திருமதி. யசோதா இளங்கோ

**நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்:**

திருமதி. சித்ரா மலர்வண்ணன்

**புகைப்பட நிபுணர்:**

திரு. சந்தோஷ்குமார் ராதாகிருஷ்ணன்

**தமிழ்ப்பள்ளி இயக்குனர் குழு:**

திரு. பொற்செழியன் ராமசாமி

திரு. பகவன்தாஸ் பலராமன்

திரு. கனிக்கண்ணன் நாராயணசாமி

திரு. இளங்கோவன் தங்கவேலு

மருத்துவர். பாரதி ராஜு

திரு. சிவசங்கர் சங்கரநாராயணன்

திரு. ராஜா கிருஷ்ணசாமி

திருமதி. பிரியா ஸ்ரீதர்

திரு. செந்தில் ராதாகிருஷ்ணன்

திரு. இளங்கோ திருப்பதி

# மிசௌரி தமிழ்ப்பள்ளி ஆசிரியர்கள் (2018-2019)

முனைவர். நாராயணன் நாராயணன்
திருமதி. ராமலக்ஷ்மி கோபாலகிருஷ்ணன்
திருமதி. சுமதி விஜய்
திருமதி. உமா பாரதி
திருமதி. சுஜா ராதாகிருஷ்ணன்
திருமதி. சுஜாதா செந்தில்குமார்
திருமதி. தீபா ரகுராமன்
திருமதி. சாந்தாகுமாரி சிவராஜன்
திரு. மணிகண்டன் பழனிசாமி
திருமதி. பாரதி பாலகிருஷ்ணன்
திருமதி. ஆஷா ஜேசு
திருமதி. ஆனந்தலக்ஷ்மி ஜெயராமன்
திருமதி. ரேணுகா தேவி கிரண்குமார்
திருமதி. தமிழ்ச்செல்வி செல்லையா
திரு. மஞ்சுநாதன் வெங்கட்டராமன்
திருமதி. சசிகலா கருப்புசாமி
திருமதி. செந்தில் நாயகி சுப்பிரமணியன்
திரு. ராம்குமார்
திருமதி. புவனேஸ்வரி ராஜேந்திரன்
திருமதி. கோகிலா தர்மராஜன்
முனைவர். கவிதா தாமல்
திருமதி. கலா
மருத்துவர். பாரதி ராஜு
திருமதி. ராஜலக்ஷ்மி ரமேஷ் பாபு
திருமதி. பவித்ரா கணேஷ்

திருமதி. உமாமஹேஸ்வரி பிரதீப்
திருமதி. மீனாட்சி கணபதி
திருமதி. ஸ்ரீமதி அருண்குமார்
திருமதி. சுனிதா ஜோதிலிங்கம்
திரு. சிவராஜன் ஐயப்பன்
திருமதி. ஷோபனாதேவி பாலசுப்ரமணியம்
திருமதி. கலைவாணி நிரஞ்சன்
திருமதி. அனுஜா
திருமதி. எழிலரசி ஆறுமுகம்
திரு. கோ. தேவ்குமார்
திருமதி. சுபாராஜேஸ்வரி
திருமதி. திவ்யா பாலா
திருமதி. ஆனந்தி வெங்கட்
திரு. காமேஸ்வரன் நரசிம்மன்
திருமதி. ராஜேஸ்வரி விக்ரமன்
திருமதி. அபிராமி சுரேஷ்குமார்
திரு. சிக்கல் குமார் நாகராஜன்
திருமதி. ஹேமலதா தேவ்குமார்
திருமதி. சாந்தி ஜெயபிரகாஷ்
முனைவர். ரம்யா ஞானகிராம்
முனைவர். ஜோதிலிங்கம் சிவபாக்கியம்
திருமதி. மீரா ஜெயபால்
திருமதி. ஜெயந்தி கிருஷ்ணமூர்த்தி
திருமதி. மஞ்சு அருண்
திருமதி. காயத்ரி கிருஷ்ணமூர்த்தி
திரு. இளங்கோவன் தங்கவேலு
திரு.ராஜா கிருஷ்ணசாமி

திரு. சக்திவேல் ஜெகதீசன்
திருமதி. லோகநாயகி சங்கரநாராயணன்
திரு. சங்கரநாராயணன் ராமசந்திரன்
திருமதி. வினோதா ராஜ்
திருமதி. பிச்சம்மாள் வேலாயுதம்
திரு. சிவசங்கர் சங்கரநாராயணன்
திருமதி. கீதா சிவசங்கர்
திருமதி. நவஜோதி நமச்சிவாயம்
திருமதி. சரண்யா கண்ணன்
திருமதி. ப்ரியா ஞானசிவம்
திருமதி. லலிதா ஈஸ்வரமூர்த்தி
செல்வன். தர்ஷன் ஈஸ்வரமூர்த்தி
செல்வன். சத்யநாராயணன் சிவசங்கர்
செல்வன். சர்வேஷ் பழனியப்பன்
திருமதி. சத்யப்ரியா சங்கர்
திருமதி. மீனாக்ஷி ராமகார்த்திகேயன்
திருமதி. ஹேமலதா சமர்த்தி

## மாணவர் தன்னார்வலர்கள் குழு

செல்வன். ஆதிசரண் ஸ்ரீதர்
செல்வன். கனிஷ்க் சண்முகம்
செல்வன். பிரித்வி தனபால்
செல்வி. அனன்யா செந்தில்நாதன்
செல்வி. ஹரிணி கணபதி
செல்வி. மிர்ரா ராமகிருஷ்ணன்
செல்வி. நியதிகா விக்ரமன்

ஜனவரி 25ஆம் தேதி நடந்த மிசௌரி தமிழ்ச்சங்கத்தின் வெள்ளி விழாவில், நம் மாணவர்கள்
திருக்குறள் மறையோதுதல், நடனம், நாடகம், சேர்ந்திசைப் பாடல்,
வாத்திய இசை என தமது திறமைகளை பலவகையில் வெளிப்படுத்தி நம்மை மகிழ்வித்தனர்.














மிசௌரி தமிழ்ப் பள்ளி

AdvancED ACCREDITED

நமது தமிழ் மொழி விலைமதிக்க முடியாத பாரம்பரிய சொத்து.
நமது பண்பாட்டின் அடையாளம், யார் என்பதற்கான முகவரி!
அதை உங்கள் குழந்தைக்கு வழங்கவேண்டுமெனில் தமிழ்மொழி
கற்றுக்கொடுங்கள். அமெரிக்காவில் மட்டும் 3000 க்கும் மேற்பட்ட குழந்தைகள்
தமிழ் கற்கிறார்கள். அதே போல் தமிழறிந்த அமெரிக்கத்தமிழராய் உங்கள்
குழந்தையும் இருக்கவேண்டாமா?

# 20 ஆண்டுகளாக செயின்ட் லூயிசில் நூற்றுக்கணக்கான தமிழ் மாணவர்களை உருவாக்கியுள்ள

# மிசௌரி தமிழ்ப்பள்ளியில் சேருங்கள்



- தமிழ் இணைய பல்கலைக்கழக அங்கீகாரம் பெற்றது.
- AdvancED அங்கீகாரம் பெற்றது.
- அமெரிக்கத் தமிழ் கல்விக் கழகம் (ATA) சார்ந்த பாடப் புத்தகங்கள் பல்கலைக்கழகத் தேர்வு, சான்றிதழ்!
- ஒழுங்கு முறைப்படுத்தப்பட்ட 8 வருட பாடத்திட்டம்.
- இங்கு பயின்றால் பல்கலைக்கழகங்களில் இரண்டாவது மொழியாக தமிழ் கற்பது எளிது.

*For your kids to learn Tamil in Saint Louis, enroll them in Tamil School.*

- 8 year structured syllabus.
- Eligible for High School Foreign Language credits.
- Recognized by Tamil Virtual University and American Tamil Academy
- Exams and Certificates from TVU and ATA.
- If you would like to volunteer in Tamil school this is a nice opportunity.

Contacts:
http://school.motamilsangam.org/ and text to school@school.motamilsangam.org
Sivashankar (314) 495 8817 (O'Fallon) Senthil (636) 487 4221,
Porchezhian (314) 878 5832

# THINKING ABOUT BUYING A HOME?

## Get the right mortgage for your needs.



Whether you're a first-time homebuyer, are investing in real estate, or are looking to upgrade your lifestyle with a luxury home purchase, I'll help you understand your options and will stand by your side from application to closing. We offer many programs that may benefit you!

**CONTACT MARK FOR MORE INFORMATION TODAY**



**Mark Mayfield**
Originating Branch Manager
314.328.9914
Mark.Mayfield@myccmortgage.com
NMLS292254

**CrossCountry Mortgage, Inc.**
Two CityPlace Dr.
2nd Fl. Office 201 & 287A
St. Louis, MO 63141
NMLS3029 NMLS1828204

CrossCountry
More than a Mortgage
KUBERA MORTGAGE GROUP

Illinois Residential Mortgage Licensee. All loans subject to underwriting approval.
Certain restrictions apply. Call for details. NMLS3029 (www.nmlsconsumeraccess.org).

EQUAL HOUSING OPPORTUNITY